௳

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௮ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, மாசி மார்ச்சு, 1954 | பரல் ௭

## இரசிகமணி, டி. கே. சி. பிரிவு

போதும பொன்னும் உந்தி அருவியிறங்கி வற்றாவளங் கொழிப்பது, திருக்குற்றாலம். அக்குற்றாலம தமிழ் தழீஇய சாயலுடையது, தமிழ்ப பாட்டிசைக்கும வண்டுகள் வாழ் பன்மலர்களையும மேலேயெடுத்துத் தாங்கிவருவது தண்பொருநதம் என்னும தனியாறு இவ்வளங் கொழிக்கும திருக்குற்றாலத்திலே தமிழே தம இருகண்களாகக்கொண்டு, கம்பர் திருப்பாட்டிலே—காவியத்திலே—அவ் ஓவியத்திலே திளைத்துத் திளைத்து வாழ்ந்துவந்த பெரியார், திரு டி. கே சிதம்பரநாத முதலியாரவர்கள. அவாகள், சென்ற பிப்பிரவரித் திங்கள் ௧௬-ஆம் நாள் காலை ௮-மணிக்குத் தம் பருவுடல் நீத்துப் பொன்றாப் புகழுடம் பெய்தினர்கள். அவாகள் பிரிவு, தமிழ் நாட்டுக்கு—கலைச் சுவைஞா உலகுககு—ஈடும் எடுபபுமற்ற பேரிழப்பாகும். அவர்கள் பிரிநதகாலததில் அவர்கட்கு அகவை எழுபத்து மூன்று. இம் முதிரநத எழுபான் அகவைக் காலததினும் அவர்கள் தமிழ் மொழியை—கம்பர் காவியததை—முத்தொள்ளாயிரம் போன்ற அழகிய பொருள் மிக்க நூல்களை மறந்தனரில்லை. இவர்கள் ஆங்கிலங் கற்று, அதில் துறைபோன பெரும் பட்டம் தாங்கியிருந்தபோதினும் அதில், அம்மொழியில் மோகங்கொள்ளாது தமிழ் மொழியில் அளவுகடநத பற்றுக் கொண்டு பற்பல மேடைகளில் ஏறித் தமிழ்க் கவிகளின் ஏற்றத்தையும, அதில் அமைந்திருக்கும் சொல், கருத்து, பொருள் நயங்களையும், எடுத்தெடுத்துக் கேட்டார்ப்பிணிக்கும் தகையுவாய்க் கேளாரும் வேட்ப விரிவுரை நிகழ்த்துவதில் மிக வல்லுநராய் இலகினர்கள். இவர்களின் சொற்பொழிவைக் கேட்ட தமிழ் அறியாதோரும் தமிழ்ப் பண்பில் ஈடுபாடுற்றுத் தமிழ்

மொழியில் ஆரா அயராக் காதலராய்க் கம்பர் தரும காட்சியில் ஈடுபாடுடையராய்ப் போதருவாராயினர்.

இவர்கள் கலைததுறையில் வேருன்றி உலகெலாம் செழிப்ப அறிவு விருநதளித்தலோடு, தம்மை நாடிவருவார யாவர்க்கும் நாச்சுவைகொள்ளத தம் இல்லததை அடையா நெடுங்கத வுடையதாக ஆக்கி விருந்து புறந்தநத அரியபெரிய தமிழ்ப் பண்பாடுடையவராவர் இவர்கள விருநதினாப்பேணும மேன் மையையும், அறிவுத் திறனையும் பாராட்டி,

> 'தமிழக குலத்தின பணபாட்டிற்கு ஓர எடுததுக்காட்டு வேண்டுமானல், டி. கே. சி. என்று ஒருதலையாகக கூறலாம். விருநதளிததல் எனபது அவர்களிடம் ஒரு கலையாக விளங்கிற்று; குற்ருலததில் அவர்களைக காண நற்றமிழ அறிஞர்கள் வருவார் கள், பெருஞ்செல்வாகள வருவாாகள், மநதிரிகள—அதிகாரிகள் வருவார்கள, பிறநாட்டு நல்லறிஞாகளும வருவாாகள, இவாகள் எல்லோரையும் நல்விருநதாலும் சொல விருநதாலும மகிழவிககும் சிறப்பு, டி கே. சி அவாகளிடம நிகரற்றமுறையில அமைந் திருநதது. நண்பாகளுககுக குற்ருலம ஆவியகன்ற கூடுபோலவே தோன்றும், மலையிருநதென்ன! மநதமாருதம இருநதென்ன! அருவிதான் இருநதெனன! அறிவுககளஞ்சியத்தை இழநது விட்டோம'

எனறு, பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையவர்களே வானெலி யில் வாய்விட்டுக் கதறுவாாகளானல், அறிஞர் டி. கே. சி. யின் பண்பாட்டை என்னெனப் பகாவது?

இவர்களின் புகழ் நம செந்தமிழகமன்றி மொழிபெயர் தேயங்களினும் சென்று பரவி ஓங்கலாயிற்று. வங்கப பெருங் கவிஞராகிய ரவீந்திரநாத் தாகூரின் சாநதி நிகேதனததினும் நம் டி. கே. சி.யின் கொஞ்சும் தமிழ்—இளந்தமிழ்—வீறுபெறு வதாயின், அவர்கள் தமிழ்க்காதலை எச்சொல்லில் இயம்பிப் போற்றுவது!

'கல்கி' இதழ்களில் கிழமைதோறும் தவருது 'கம்பர் தருங்காட்சி' என்னும் தொடரில் பல தலைப்புகளில் கம்ப ராமாயணப் பெருங்கடலிலிருந்து மொண்டு மொண்டு அறிவு மாரி பொழிந்து தமிழ்மாநில மக்களினப் பயிர்களுக்கு அறிவு வேட்கை தணித்த அரும் பண்புடைய மேகமன்ருே நம் டி. கே. சி. அவர்கள்? ஏடு தொடாது நாடோடியாகத் திரிந்தார் பலரும் கம்பரைக் கற்க—இலக்கியச் சுவைகாண— அறிவுப்பசி ஆற்ற-அலைந்து அலைந்து ஊணும் உறக்கமும்கூடப் பெரிதெனக் கருதாது இவாகள் சுவைகாணச் செல்வாாகளா யின், டி. கே. சி.யின் அரும்பெறற் பண்புதான் என்னே! என்னே!

'ஒருநாள் உறைந்திசினோர்க்கும் வழிநாள் பண்பின் மறக்கும எமபதி' என்றார் அனறோர் தமிழ்ப்புலவர்; 'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல் அனைத்தே புலவர் தொழில்' என்றார் வளளுவப் பெருந்தகையார்; 'தவலரும் தொல்கேள்வித் தன்மை புடையார், இகலிலர் எஃகுடையாா தம்முட் குழீஇ நகலின் இனிதாமோ........உம்பா உறைவார் பதி' என்றார் சமண முனிவர்

இவ்வெல்லா மொழிக்கும் இலக்காகத் திகழ்நதது, அவர் இல்லம்; அவா பண்பாடு, அவர் இரசிகத்தனமை. அவர் காலமெல்லாம கற்றே கழிததார், கேட்டே மகிழ்நதார்; கேட்கவே மொழிந்தாா டி. கே. சியின் புகழ் யாண்டும் இன்று மண்டிக்கிடக்கின்றது 'தோன்றிற் புகழொடு தோன் றுக' என்னும் பொனமொழிக்கு இலக்கியா, நம் டி. கே சி.

இத்தகைய திசையனைத்தும புகழ்பரபபி வாழ்ந்த டி. கே. சி. பிறந்த ஊா, 'பாண்டிநாடே பழம்பதி' என மணிமொழிப் பெருமான் வாயில் வளமபெற்ற பாண்டிநாட்டில, தென்காசியை அடுத்த களஙகாடு எனப பெயரியதாகும். இவா தந்தையாரின பெயர் தீர்ததாரப்ப முதலியார். 1882-ல் பிறந்தார்; முறை யாகத தமிழ்மொழிக் கல்வியும் ஆங்கிலமொழிக் கல்வியும் கற்றாா. ஆஙகிலத்தில் பி. ஏ, பி. எல். பட்டம் பெற்றார். இநதுமத தாபன போரடில் ஆணையாளராக இருநது பல நறறொண்டுகள் புரிந்துள்ளனர். 1924-ல் இவர் திருநெல் வேலியில் இலக்கியச் சஙகம் ஒன்றை நிறுவினர். கமபராமா யணததை நனகு கருததூன்றிக் கற்றாா; அதில் பல இடைச் செருகல் உண்டெனக் கருதினர். அதில் ஈடுபாடுற்றார். என்றும் அவர் கம்பரை மறநததில்லை. இவர் தாம நன்கு அனுபவித்துப படித்த கருத்துரைகளை உலக மக்கட்கு வெளி யிற்காட்டவேண்டி, இதய ஒலி, கம்பா யார்? என்னும் நூல்களும் முத்தொள்ளாயிர உரையும், வேறு நூல்களும் இயற்றியுள்ளனர். ஆண்டுதோறும் காரைக்குடியில் கம்பர் திருநாள் கொண்டாடு தற்கு முதற் காரணராக இருநதவர் இவரே.

இத்தகைய சிறப்புக்குரிய, டி. கே. சி. அவர்கட்குப் பேரர் கள் இருக்கின்றனர்.

டி கே சி. அவர்கட்குக் கம்பராமாயணப் பாடல்களில் மிக்க சுவைக்குரிய பாடல்கள் பலவுண்டு. அவற்றுள் ஒன்று, இராம பிரான் முடிசூடுதற்குத் தடங்கலாகித் தன்னந்தனியனாய்த் தன் தாய் கோசலையைக் காணச் சென்றபோது நிகழ்ந்த உருக்கமான நிகழ்ச்சி. அதை அவர்கள் அடிக்கடி பாராட்டிப் பேசிச்

சுவைத்து மகிழ்வார்கள். அதில் மன்னர் கோலத்தில் இராமன், ஏவலர் முதலியோர் புடைசூழ, இருமருங்கும் வெண்சாமரை இரட்ட, வெண்கொற்றக்குடை பிடித்துப் பக்கலில் வர, தலையில் மணிமுடி தரித்து அழகுடன் வருவானென எண்ணித் தன் மகன் வரவை எதிர்நோக்கி யிருந்தாள் கோசலை. அதுகாலை இராமன் சென்ற காட்சி,

'குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண்
குடையும் இன்றிக்
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின்
இரங்கி ஏக
மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன்
வருமென் றென்று
தழைக்கின்ற உள்ளத் தன்னாள் முன்னொரு
தமியன் சென்றான்'

என, அவள் நினைந்ததற்கு மாறாகத் தனியனாய்ப் பக்கத்துணை எவருமின்றி வந்ததே அவள் உள்ளமுருக்கும் காட்சியாக இருந்தது. இந்நிலையை டி கே. சி அழகுற விளக்கி விளக்கிப் பலநயமும தோன்றக் கூறுவார்கள்.

இக்காட்சி நிலையில் அறிஞர் டி. கே. சி. அவர்கள், தம் இல்லந்துறந்து, தனக்குரிய அறிஞர் சூழலை மறந்து, என்றுமுள தென்றமிழ் ஏற்றத் தொண்டினையும் நெகிழ்த்து, எல்லாம் வல்ல இறைவன் திருவடிப் பேறெய்தியமை குறித்து அவர் கொண்ட உயர் காப்பியமாகிய கம்பராமாயண அப்பாட்டினைக் கொண்டே எம் மனமாழ்கிய வருத்தத்தைக்கூறி, அவரைப் பிரிந்து கரை காணாப் புன்கணில் மூழ்கியிருக்கும் அவர்தம் மனைத்தக்க மாண் புடையராகிய இல்லக்கிழத்தியாருக்கும் அவர்தம் பெயரர்கட்கும் ஆறுதலுடன் கூடிய எம் உளமார்ந்த வருத்தத்தைத் தெரி வித்துக்கொள்கின்றோம் அவர் நல்லுயிர் இறையடிப் பேறுற்று இன்புறுவதாக.

ஆசிரியர்.

# திங்களைப் போற்றுதும்

[திருவாட்டி, மாசில்லாமணி அம்மையார்]

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடிவைத்தனர் பாரதியார். சிலப்பதிகாரம் சொல்லிய கதை மாத்திரமா நெஞ்சை யள்ளுகிறது? இளங்கோ, கதையைச் செவ்விய முறையில் ஓட்டிச் செல்லுதற்கு உதவிய செய்யுள் நடையும் நெஞ்சையள்ளுகிறது பொருள், செய்யுள்நடை என்ற இரண்டையும் பொருந்திய தன்மையில் கலந்து நம் நெஞ்சையள்ளுகின்றார், ஆசிரியர். 'பொருளை அழகுறுத்திக் காட்டுவது செய்யுள்நடை' எனகிறார், ஆங்கிலப் புலவர் பேக்கன் (Bacon).

இளங்கோவடிகள் தாம் இழைத்த காப்பியத்தில், கதையை ஓட்டிக்கொண்டு செல்கையிலேயே உரிய இடங்களில், கதைத் தொடர்ச்சியைச் சிறிது ஒதுக்கி, இசைப்பாட்டுக்களில் இறங்கிவிடுகின்றார் ஆற்றுவரி, கானல்வரி, வேட்டுவவரி முதலிய கூறுகள் இதற்குச் சான்றாயமைகின்றன. இளங்கோவடிகளின் செய்யுள் நடையில் வெவ்வேறுபட்ட இத்தகைய கூறுகளை இடையிடையே கண்டு உள்ளங்களிக்கின்றோம். சிலப்பதிகார நூல் முழுவதையும் தொடர்ச்சியாக ஒருமுறை படித்துக்கொண்டு செல்லும் ஒருவன், நூலில் காணும் பலதிறப்பட்ட செய்யுட் கூறுகளும் இயல்புகளும் மனத்துக்குக் கிளர்ச்சியையும் ஊக்கத்தையும் ஊட்டிக்கொண்டு செல்வதை உணருகின்றன. வாழ்க்கைக்கு இனிமையளிப்பன பல்வேறு திறப்பட்ட கூறுகளே (Variety is the spice of life). இளங்கோவடிகள் அவ்வுண்மையை வரலாற்றிலும், செய்யுள்நடையிலும் பொதிந்து வைத்து நம்மை மகிழ்விக்கின்றார். இந்த முறையில் ஆராய்ந்து பார்த்தால் அவர் காப்பியம் ஒரு நாடகக் காப்பியமாயமைகிறது. கதைத் தொடர்ச்சியிலும், செய்யுள்நடையிலும் வெவ்வேறு கூறுகளையும் பாக்களையும் அவர் வலிந்து கலந்து கோத்து நூலாக்கவில்லை அவர் காப்பியத்தைப் பாடிக்கொண்டு செல்லும் விரைவில், அவை தாமே வந்து சேர்ந்து அமைகின்றன. சிற்சில வேளைகளில் பழம் புலவர்களோ, நாட்டு மக்களோ கூறியிருந்த பாடல்வரிகளை அவர் நினைவில் வந்து குறுக்கிட்டிருக்கலாம். அவைகளையும் அவர் உரிய இடத்தில் சேர்த்து அமைத்துக் கொண்டார். ஆகவே, அவர் காப்பியத்தில் வந்துள்ள இசைப் பாடல்களிற் சில, பழங்காலப் பாடல்களாயிருத்தல் வேண்டும். இதுவரை கூறவந்தது யாதெனில், இளங்கோ தமது உள்ளக்

கிளர்ச்சியில் ததும்பிவந்த சொற்களை அள்ளியெறிந்து அழகு கொடுத்து வரைகின்றார். அவர் நூலைத் துவங்கும்போதே அப்படித் துவங்குகின்றார். மங்கலவாழ்த்துப் பாடலின் பொருள், செய்யுள் நடை என்ற இவற்றைச் சிறிது பார்ப்போம்.

ஆங்கில ஆசிரியர் ரஸ்கின் (Ruskin) ஸெஸமும், லில்லி ஸும் (Sesame and Lilies) என்ற தமது நூலில், "சிறந்த ஆசிரியனொருவன் மனக்கிளர்ச்சியில் அள்ளிவீசும் சொற்கள் பயனற்ற வெற்றுச் சொற்களாயிராமல், நயத்துடன் கூடி ஒவ்வோரிடத்திற்கும் இன்றியமையாச் சொற்களாயமைகின்றன" என்கிறார் இளங்கோவடிகள் மங்கலவாழ்த்துப் பாடலில்,

"திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்,

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேரு வலந்திரித லான்,

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி உலகிற் கவனளிபோல்
மேனின்று தான்சுரத்த லான்,

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோ(டு)
ஓங்கிப் பரந்தொழுக லான்"

என்று பாடுகையில் ஓசை நயமும், இனிமையும், பொருட் செறிவும் நிறைந்த நான்கு சிந்தியல் வெண்பாக்களைக் கேட்டு மகிழ்கிறோம் 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்' என்பன போன்ற நான்கு அடுக்குத் தொடர்களைக் கூறியதில் தொனிக்கும் சந்தத்தையும் கேட்டும் உணர்ந்தும் களிக்கிறோம். உலகளிக்கும் திங்களை முன்வைத்து, மேருவலந் திரியும் ஞாயிற்றை அடுத்து வைத்து, மேனின்று சுரக்கும் மாமழையை அதன்பின் வைத்துப் பின் இவற்றுடன் சேர்த்து முறையாய்க் கூறக்கூடாததாகிய புகார்நகரைக் கடையில் வைத்து, சோழன் குலத்தைப் புகழ்வோர், இதனையும் புகழ்வார் என்ற கருத்துப்பட 'பூம்புகார் போற்றுதும்' என்றார். கதையைக் கூறக் காத்திருக்கும் புலவர், திங்களையும், ஞாயிற்றையும், மாமழையையும் கூறியபின் கதை நிகழுமிடமாகிய பூம்புகாரையும் இவ்விடத்துப் புகுத்தி இணைத்ததில் ஒருநயம் காண்கிறோம். மேலும் பூம்புகாரைப் போற்றிய புலவர், அந்நகர்ச்

சிறப்புக்குக் காரணம் கூறுகிறார். பொதியம், இமயம், பூம்புகார் இம்மூன்று இடங்களிலும் உயர்ந்தோரிருப்பதால் இவை எக்காலத்தும் நிலைபெற்று நின்றன என்றார்.

இதன்பின் வரும் பகுதி செய்யுள் நடையில் மாறுபடுகிறது 'திங்களைப் போற்றுதும்' என்று பாட்டு இசையில் (Lyric Charm) முழங்கி, புகாரின் சிறப்பை அடிகோலிக் கொண்டு, இப்பகுதியில் ஆசிரியர் கதையை விரைவில் கூறிக் கொண்டு போகிறார். இடையிடையே தனிச்சொல் வரப்பெற்று நாற்சீரடிகளமைந்த நான்கு நான்கு அடிகளால், புகார்நகரில் மாநாய்கன் குலத்தில், பன்னிரண்டு அகவையுடைய கண்ணகி என்னும் பெண்ணிருந்தாள் என்றும், மாசாத்துவான் என்பானுக்குப் பதினாறு அகவையுடைய கோவலன் என்னும் மகனிருந்தானென்றும், கண்ணகியையும் கோவலனையும் நல்லதோர் நாளில் மணம் செய்துவைக்கத் தாய்தந்தையர் விரும்பினரென்றும் சுருங்கக்கூறி விளங்கவைத்து நயம்பட முடித்தார். முதற்பகுதியிலிருந்த முழக்கமும், பாட்டு ஓசையும் மனத்தை இன்புறுத்தும் அடுக்குத்தொடரும் இங்கில்லை. கதையைச் சுருக்கமாய்க் கூறிக்கொண்டு செல்லும் இப்பகுப்பில் சொற்கள் சந்தத்துடன் கோக்கப்பெற்று, ஆற்றொழுக்குடன் சென்று கதையைத் தட்டுத் தடங்கலில்லாமல் நாம் சுவைக்கும்படி செய்கின்றன.

மூன்றும் பகுப்பு ஒரு தனிப்பொருளைக் கொண்டது. இங்குக் கோவலனுக்கும் கண்ணகிக்கும் நடந்த திருமணத்தைக் கூறிப், பின் அவர்களை ஏத்தி, அவர்கள் நாட்டரசனாகிய கரிகாலன் நீண்டகாலம் வாழும்படி வாழ்த்தி முடிக்கிறார் ஆசிரியர்

> "முரசியம்பின முருடதிர்ந்தன
> முறையெழுந்தன பணிலம்வெண்குடை
> அரசெழுந்ததொர் படியெழுந்தன
> வகலுண்மங்கல வணியெழுந்தது"

என்று துவங்கும்பொழுதே மங்கல நிகழ்ச்சியைச் சுட்டிய முழக்கமிருக்கிறது. இவ்வடிகளில் ஒருவகை ஒலிக்குறிப்பு (Sound echoing sense) தொனிக்கிறது. 'முரசியம்பின முருடதிர்ந்தன' என்று நாம் படிக்கும்போதே இசைக் கருவிகளின் முழக்க ஒலியைக் கேட்கிறோம். பின்வரும் அடிகள் ஒரேதன்மையாய் நாற்சீரடிகளாய்ச் செல்லுகின்றன. மண நிகழ்ச்சியை வருணிக்குங்கால் ஆசிரியர், எந்த மணவினையை எடுத்துச் சொன்னாலும், எந்த ஆசிரியரும் இங்குக் கூறப்பட்ட

நிகழ்ச்சிகளையே கூறுவர். என்றாலும், இளங்கோவடிகள் எடுத்துக்கோக்கும் சொற்களில் எல்லையற்ற சந்தமும் (Cuphony) இன்பமும (Pleasure) காண்கிறோம். அவரது தெள்ளிய நடையைச் சுவைத்துக்கொண்டே செல்கையில் முச்சீரடியாகிய ஈற்றுக்கு அயலடியைக் கண்டு, இந்த மயங்கிசைக் கொச்சகக்கலிபபா முடிவுக்கு வருகிறதென்றறிகிறோம். ஒரு நாடகம் முடிவுக்கு வருதல்போன்ற உணர்ச்சி நமக்கு வருகிறது.

நாடகக் காப்பியம், முத்தமிழ்நூல் எனறெல்லாம சிலப்பதிகாரததிறகு வேறுபெயர்கள வழஙகிவருகின்றன. அப்பெயர்கள் இந்நூலுக்குப் பொருததமானவை யென்று இவவாழ்த்துப் பாடல் நேரடியாய்க் காடடவில்லையெனினும, நாடகச் சுவையும், இசைத் தமிழ்ச் சுவையும் இயற்றமிழாயமைநத இப்பகுதியிலும் கலநதிருப்பதைதக காணலாம. பாடலடிகள் அளவிலும், ஓசையிலும் ஆங்காங்கே மாறுபடுகின்றன. இங்ஙனம மாறுபடுவதால் நமக்குப் புதுபபுது உணாசசிகள் வருகின்றன

> “ திஙகளைப் போற்றுதும திஙகளைப் போற்றுதும்
> கொஙகலாதாாச சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ
> அஙக ணுலகளித்த லான் ”

உலக மக்கள் மனத்து உவகையைக் கிளபபும திஙகள், மாலையிருள் மறைநதோடச் செய்யும் திங்கள், வெயிலால் வாடிய உலக மக்களுக்கு விரும்பிய குளிாசசியை அளிக்கும திஙகள், சோழமன்னன் மாலையணிநத வெண்கொற்றக் குடைபோன்று உலகிற்கு அருள செய்கிறது என்று கூறிச், சொல்லும் பொருளும் சிறநதுவிளஙக மங்கலமாய்த் துவங்கினர் இளங்கோவடிகள. இவவாறு தொடக்கததிலேயே நம் நெஞசை அள்ளி விடுகின்றான்றே ?

# கோசர்

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம்.]

(செல்வி, சிலம்பு உஅ, பரல் கூ, உகூ0 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(2) பெயர்க் காரணம்

(1) வடக்கே வத்தவ நாட்டின் தலைநகராயிருந்த கோசாம்பி என்ற நகருக்குக் 'கோசம்' என்னும் பெயர் உண்டு. அக்கோச நகரிலிருந்து பஞ்சம், பூகம்பம் முதலிய காரணங்களால் தென்னாடு போந்தவராதலின் கோசர் எனப்பட்டனர்.

(2) கோசர் இலக்கியங்களில் 'இளங்கோசர்' எனப்படுகின்றனர். வத்தநாட்டுக் கோசத்தை 'இளன்' என்பான் ஆண்டனன். அவன் வழியினர் 'இளங்கோ வழியினர்' எனப்பட்டனர் அதனால் தென்னாடு போந்தவரும் 'இளங்கோசர்' எனப்பட்டனர். இளமை காரணம் அன்று.

(3) 'வத்ஸ' என்ற ஆரியச் சொல்லுக்கு 'இளமை' என்பது பொருள். வத்ஸ தேசத்துக் கோசர் 'வத்ஸ கோசர்' ஆவர். அவரை 'இளங் கோசர்' என மொழி பெயர்த்துக் கூறினர் தமிழர்.

இம் மூன்று வகையில் காரணம் காட்டுவர் திரு. ஐயங்கார் அவர்கள். இனி இவற்றைக் காண்போம்.

(1) பஞ்சம் பூகம்பம் காரணங்களால் கோச நகரத்தினின்றும் வெளிப்பட்ட மக்கள் தென்னாடு வந்தார்களாயின், வத்த நாட்டிற்கும் தமிழகத்திற்கும் இடைப்பட்ட நாடுகளில் வேறெங்கும் தங்கி யிரார்களோ? தங்கிவந்திருக்க வேண்டுமாதலின் அவ்வந் நாடுகளில் அவர் தமக்கிருக்கும் பெயர் 'கோசர்' என்பதா? அல்லது கோச நகரத்தைக் குறிக்கும் நிலையில் வேறு பெயரா? இதனைக் கண்டால் கோசத்திருந்து வந்தவர் என நினைக்கலாம். இடைப்பட்ட நாடுகளின் சரிதம் அறிந்தோர் இதற்கு முடிபு கூறுக.

கோசரைக் கூறியவிடங்களில் அவர்தம் நாடாகிய வத்சம் உடன்சேர்த்துக் கூறப்பட்டிலது. நகரத் தொடர்பால் கூறப்பட்டவர் நாட்டுத் தொடர்பாலும் கூறப்பட்டிருத்தல் வேண்டுமன்றோ? எவ்விடத்திலும் சங்க இலக்கியங்களில் 'வத்சகோசர்' என்பது கூறப்பட்டிலாமை காண்க.

(2) கோசததிருந்து ஆண்ட அரசன் 'இளன்' என்பான் மரபினர் 'இளஙகோ' எனப பெயர் சிறப்பர் ; ஆதலின் அவர் வழிவந்தவர் 'இளஙகோசர்' எனப் பெயர் பெற்றார் என்றால், "ஊர்முது கோசர்" என்றவிடத்து முதுமைக்குக் கூறலாம் காரணம என்னை ?

"மெய்மமலி பெருமபூட் செம்மற கோசா" (அகம் · கரு)
"கருங்கண் கோசா" (அகம் : கூ0)
"காப்புக் கைநிறுத்த பல்வேற் கோசா" (அகம் : கக௩)
"ஒனறு மொழிக் கோசா" (அகம் .கக௬)

எனப் பல்லிடங்களில் பொதுவில் கோசர் எனவும்,

"வென்வேல் இளம்பல கோசா" (புறம் : கசுக)
"கடநதடு வாயவாள் இளமபல கோசா"
(மதுரைககாஞசி எ௭௩)
"கொஙகிளங கோசா" (சிலப்பதிகாரம உரைபெறுகட்டுரை)

எனச சில்லிடங்களில் 'இளங கோசா' எனவும, உசுஉ-ஆம் அகபபாட்டில "ஊர்முது கோசர்" எனவும இருத்தலைக் காணுமிடததுப பொதுவாகக் கோசரைபபறறிக் கூறுமபோது, 'கோசா' எனவும வீரரைக் குறிததுக் கூறும்போது "இளங கோசர்" எனவும முதியவரைபபற்றிக கூறும்போது "முது கோசா" எனவும கூறினர் பண்டைப புலவர் என்னலாம். புறப்பாட்டு கசுகூ-ல் விளங்குபடை கற்கும் கோசரையும், மதுரைக் காஞசியில் பாண்டியனிடம் நட்புக்கொண்டு துணையாக இருநதவரையும் "இளம்பல் கோசா" என்று கூறியிருத்தலைக் காணின் அரசரிடததுப் படைத்துணையாக இருநதவர்களையே அவ்வாறு கூறினா புலவர் என்னலாம் சிலமபிலும் செஙகுட்டுவன் எடுத்த கண்ணகிக் கோட்டததிற்கு வந்து அத்தெய்வத்தைதத தங்கள் நாட்டிலும எழுந்தருள வேணடிச் சென்று அவ்வாறே எழுநதருளுவித்து வழிபட்டவருள் கொங்கிளங் கோசரும ஆவா என வந்துளது. ஆஙகு வநதவரும் அரசராகிக் கொங்கினை ஆண்ட கோசரேயாவா. அவரும் இளஙகோசா என்றே கூறப்பட்டனர் பண்டைப் புலவர் அரசர்க்குத் துணையாக இருநதவரை "இளங்கோசா" என்றனராயினும அவரை இளங்கோசர் என்றுதான் கூறவேண்டும் என்ற நியதியைக் கொண்டிலர் என்க. மதுரைக் காஞ்சியில்,

பழையன் மோகூர் அவையகம் விளஙக
நான்மொழிக் கோசா தோன்றி யனன"

எனவும், அகப்பாட்டொன்றில்,

"வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங் கொள வெஃகிய பொலம்பூண் சென்னி"

எனவும் வீரர்களைக் குறிக்குமிடங்களில் வாளா 'கோசர்' என்றமை காண்க.

இனி 'இளன' என்பான் மரபினர் எனத் தங்களைச் சொல்லிக்கொண்டமையால் இளங்கோசர் எனப்பட்டார் எனின் யாண்டும் அவ்வாறு விளக்கமாகக் காணப்படாவிட்டாலும் அவர் இளன்வழிக் கோசர், இளங்கோக் கோசர், இளமரபுக் கோசர் என்பனவாகவேனும் கூறப்பட்டிருக்கவேண்டும் அவ்வாறின்றி இளங்கோசர் எனறே இருத்தலின் திரு ஐயங்கார் அவர்களின் கூற்று, பொருந்துமோ என ஐயுறவேண்டியுள்ளது.

(3) இனி 'வத்தசகோசர்' என்பதன் மொழி பெயர்ப்பு 'இளங்கோசர்' என்பதிலும் ஐயம் உளது என்னலாம் 'வத்தச' என்ற சொல்லை 'இளமை' என மொழி பெயர்த்ததற்கேற்பக் 'கோசர்' என்பதையும் மொழிபெயர்த்திருக்கலாம் 'வத்சம' என்ற நாட்டின் பெயர்ச் சொல்லை இளமைப் பொருளை உணர்த்தும் சொல்லாகக்கொண்டு பின் அதனைத் தமிழில் பெயர்த்தனர் என்பது சிறந்ததாகத் தோன்றவில்லை சங்க இலக்கியங்களிலும் 'வத்தசகோசர்' அல்லது 'வத்தகோசர்' என்றேனும் காணப்படவில்லை. வத்தநாட்டுக் கோச நகரத்தார் எனக் கொள்ளுமாறு யாதோர் குறிப்பும் காணப்படவில்லை

வேட்டொழிவ தல்லால் வினைஞர் விளைவயலுள
தோட்ட கடைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் திளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம் (வீரசோ அலங்: கக. மேற்)

இவ் வச்சத் தொள்ளாயிரப் பாட்டில் "வச்சத்திளங்கோ" என வந்தமையைக் காட்டலாம். வச்சத் தொள்ளாயிரம் பிற்காலத்திய நூல் என்பதைத் திரு ஐயங்கார் அவர்களே கூறினர். ஆதலின் ஈண்டு அது பயன்படாதென்க. இதுபற்றிப் பின்னர் ஆராயப்படும்.

இனிக், "கோசர் என்பவர் வத்தநாட்டுப் பழங் குடியினர் அல்லர்; கோச நகரத்து வந்தேறிய குடிகள். அங்கு வருதற்கு முன்னரே 'கோசர்' என்ற பெயருடன் இருந்தவர் எனக் கொள்ளலாம்," என்று கோசர்ப் பெயர்க் காரணத்தை வேறாகவும் கூறினர் ஆராய்ச்சியாளர் அவர்கள் கூற்றின் சுருக்கம் வருமாறு.—

"காச்மீர தேச சரித்திரமாகிய இராச தரங்கணியில் நட்பிற் பிழையாமைக்கு அந் நாட்டு மக்கள் 'கோசம்' என்ற ஓர் சூள முறையை மேறகொண் டொழுகியது கேட்கப்படுவது........ ...... நட்பிற் பிழையாத பெருவாய்மைக்குக கோச முறையை மேறகொளபவராதலின் இவர் கோசா எனபபட்டார் இக் கோசா முதலில் வததநாட்டில் குடியேறி யிருததலவேண்டும. பின்னாக காச்மீரத துவாராபதியை விட்டு வேளிர் தென்னாடு புகுமபோதே அவர் கூடவே ஆண்டிருந்த கோசமுறை வீரரும் வந்தனராவர் எனக் கொள்வது பொருநதும. எனவே, கோச வீரர் காச்மீரததிலிருந்து முனனரே தென்னாட்டிற குடியேறி யிருந்தனர் என்றும, பின்னர்த தம் இனத்தவர் இருக்கும் அத் தென்னாட்டே வததநாட்டுக கோசரும வநதுறைநதனர் என்றும் தெளிவது பொருத்தமாகும"

இனி இககூற்றைக் காண்போம் கோசர் தெனனாடு புகுதற்கு முன்னரே காச்மீரததிருநது வத்தநாட்டிற் குடியேறி னவராயின் அந நாட்டில அவாகருக் 'கோசர்' என்று பெயா வழங்கி யிருத்தல்வேண்டும அன்றோ? அவ்வாறு வழஙகிய தாகச் சான்று காட்டின் நன்றும காசுமீரக கோசா வநத பின்னர் வததநாட்டுக கோசர் வநதனரெனின் கோசருள இரு பிரிவினா தென்னாட்டில் இருந்திருக்க வேணடுமென்றோ? அங்ஙனம் இலக்கியங்களிற கூறபபடவில்லையே? வேளிா தென்னாடு போநதமைககுக் கதையுண்டே தவிரக் கோசர் போநதனர் என்றற்குக் கதையும் இலலை. காசுமீரத்தில் சூள் முறைக்குக் 'கோச முறை' என்றிருத்தற் கேற்ப அக கோச முறையினைக் கொண்டவர் 'கோசா' எனபபட்டனரா அந் நாட்டில என்பதும் தெரியவில்லை அந நாட்டிலேயே 'கோசர்' என வழஙகி யிருந்தால் தென்னாடு போந்த காலத்தில தமமை அவர்கள 'கோசர்' எனச் சொல்லியிருப்பர் எனனலாம. ஒரு நாட்டி லிருந்து பிறிதொரு நாட்டிற்கு வருபவர் தம்மைத் தம் நாட்டின் பெயராலேயே கூறிக்கொள்வரே யன்றிச் சாதிபற்றியோ, கொள்கைபற்றியோ கூறிக்கொளளார் அன்றே? ஒன்றனை உறுதிபபடுத்தவேண்டிச் சூளுற்றுக கூறுதல் நம்மிடததிலும உண்டன்றோ? சூளுறுமபோது ஒன்றைத் தொட்டுச் சூளுறுதலும உண்டு. வீராகள சூளுற்றுக் கூறும் மொழியினை, "நெடுமொழி' என நம நூல்கள் கூறும் காசுமீர நாட்டினர் சூளுற்றுக் கூறும் முறைக்குக் கோசமுறை என்றனர். நம் கோசரும் வாய்மொழியினர், ஒன்றுமொழியினர் என்றெல்லாம் கூறப் படுதலின் இவர்க்கும் காசுமீரக் கோசமுறையினர்க்கும் பொருத்தம் காட்டுதல் எவ்வகையில் பொருந்தும்? "வாய்

மொழிக் கபிலன" எனக கபிலரைக் கூறுதலின் அவரும் கோசர் ஆவரோ? அவரே "மன்னும் அந்தணன்" (புறம். உ00) எனத தமமைக் கூறிக்கொளளுகினறு ரனரே?

## (3) வச்சத்தோள்ளாயிரம்

வச்சத தொள்ளாயிரம பிற்காலத்து நூலாதலின் அநநூற் பாக்களிற காணும 'வசசததார்,' 'வததவா' என்பன கொண்டு வததநாட்டவரே நம இலக்கியங்களிற் காணபபடும 'கோசா' என் பது பொருநதுமோ என்ற ஐயம தோன்றுகின்றது ஆராய்சசி யாளர் அவாகள் வச்சத தொள்ளாயிரப் பாடடையும ஆதார மாகக் கொண்டனா. அஃது ஆதார மாகாமைக்கு ஈண்டுச சில காண்போம.

சங்க இலக்கியஙகளில் வத்தர்—வசசா என்ற சொற்கள் இல்லை. பிறகால நூலகளிலேயே காணபபடுகின்றன. பெருங் கதைத் தலைவன் உதயணன் வத்தநாட்டினன் ஆதலின, அவன் 'வத்தவன்' எனப்படுகின்றான். கி பி 1012 முதல் 1044 வரை ஆண்ட முதலாம் இராசேநதிர சோழன் வடக்கே படையெடுத் துச சென்ற காலததில் 'சககரக் கோட்டம' என்ற இடத்தைக் கைப்பற்றினன் என்று அவன் கலவெட்டுக் கூறும். இச சக்க ரக் கோட்டம் என்பது வியாகப்பட்டினம் சில்லாவுக்கு வட மேறகே மததிய மாகாணத்தில் வதச ராசசியததில் இருந்த ஒரு நகரம ஆகும இக் காலததில சிததிர கோட்டம என்று வழஙகுகின்றது.

"விளங்கு சயமகளை யிளஙகோப் பருவத்து,
சககரக கோட்டதது விக்கிரமத் தொழிலால்
புதுமணம புணாநது மதவரை யீட்டம
வயிரா கரத்து வாரி" (S I. I. VOL. 3. No. 72.)

என முதலாம் குலோததுங்கன் கல்வெட்டுக் கூறுதலால் அவனும வதச நாட்டில படை யெடுதது வென்றவன் என்பது அறியலாம்.

"விருதராச பயஙகரன் முனனொரு நாள்
வென்ற சக்கரக் கோட்டத்திடைக கொழும்
குருதியும் குடரும் கலந்தட்ட வெங
கூழ தெறித்தொரு கணகுரு டானவும்." (க.பரணி. 6. 14.)

"மாறுபட் டெழு தண்டெழ வததவர்
ஏறுபட் டதும் இம்முறை யனறோ" (க பரணி 11. 73.)

எனக் கலிங்கத்துப்பரணி கூறுதல் காண்க. இவன் மகன் விக்கிரம சோழனும் வென்றான் என்றும் தெரிகின்றது. குலோத்துங்கனால் வெல்லப்பட்ட வத்ச அரசன் தாராவர்ஷன் என்பான். குலோத்துங்கன் காலம் கி. பி. 1070—1120 என்று தெரிகின்றது.

தமிழரசர்கள் வடநாட்டுப் படையெடுப்பில் வெற்றிகொண்டமைக்கறிகுறியாக அவ்வந் நாடுகளின் பெயர்களைத் தம் பெயர்களுடனே தம் படைத்தலைவர்களின் பெயர்களுடனே வைத்துச் சிறப்பித்துக் கொண்டனர் என்னலாம். வென்ற நாடுகளின் பெயர்களையும் தம் நாட்டு ஊர்களுக்கிட்டு வழங்கியும் இருந்தனர். இவ் வகையில் வத்சநாட்டை வென்றமைக்கேற்ப வத்தநாடு எனவும் குறிப்பிட்ட ஓர் இடத்துக்கு வைத்திருக்கலாம் வென்ற நாடுகளில் தம் படை முதலிகளைத் தலைவர்களாக்கி அவ் விடங்களில் இருக்கும்படியும் ஏற்படுத்தினர். [1]அரையன் மதுராந்தகனான குலோத்துங்க சோழ கேரள ராசன் என்ற படைத்தலைவனைக் கோட்டாற்றில் நிறுவப்பட்ட நிலைப் படைக்குத் தலைவனாக்கியதும், வாணகோ வரையன் சுத்த மல்லனுக்கு உத்தமசோழனாகிய இலங்கேசன் என்ற பட்டம் ஈந்து சிறப்பித்ததும் முடிகொண்டான் என்பவனுக்கு வத்தராயன் என்ற பட்டம் ஈந்து வத்சநாட்டுக் கதிபதி யாக்கியதும் முதலாம் குலோத்துங்கன் செயல்கள் என நாம் கல்வெட்டுக்களின்மூலம் அறிகின்றோம்.

இத் தமிழ்த் தலைவர்களாலும் இவர்தம் வழியினராலும் தமிழகத்தில் வடநாட்டு ஊர்களின் பெயர்களும், அரசர்களின் பெயர்களும் நிலவின என்னலாம். கொங்குநாட்டில் வத்தராயன், வத்தவன் முதலிய பெயர்கள் காணப்படற்கு இதுவே காரணம் என்க. வச்சத் தொள்ளாயிரம் என்ற நூலும் இத்தகைய படைத்தலைவன் ஒருவனைப் பற்றியதாகவே யிருத்தல்வேண்டும். அவன் யாவன்? திரு. T. V சதாசிவ பண்டாரத்தாரவர்கள் கஞ்சாறன் பஞ்சநதி முடிகொண்டானான வத்தராயன் என்பவனாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். அவர்கள் கூற்று வருமாறு :....

[2]"கஞ்சாறன் பஞ்சநதி முடிகொண்டானான வத்தராயன்: இவன் சோழ மண்டலத்தில் திருவிந்தளூர் நாட்டிலுள்ள கஞ்சாறு என்னும் ஊரினன்; பஞ்சநதி வாணன் என்பவனுடைய புதல்வன்; முடிகொண்டான் என்னும் இயற்பெயர் உடையவன்; குலோத்துங்க சோழன் படைத்தலைவர்களுள்

---

1. பிற்காலச் சோழர் வரலாறு பகுதி II பக் 60-62.
2. ஷை ஷை 62, 63.

ஒருவன், இவ் வேந்தனால் அளிக்கப்பட்ட 'வத்தராயன்' என்ற பட்டமுடையவன். இது வத்சராஜன் எனவும் வச்சராயன் எனவும் வழங்கப்பெறுவதுண்டு. வச்சத் தொள்ளாயிரம் என்னும் நூல் இத் தலைவன்மீது பாடப்பெற்ற ஒரு பிரபந்தமாயிருத்தல் வேண்டும்."

[1]வாடை குளிர மருந்தறிவா ரில்லையோ
கூட லினியொருகால கூடாதோ—ஓடை
மதவா ரணத்துதயன் வத்தவர்கோ னாட்டிற்
கதவான தோதமியேன் கண.

இப் பாடல் வச்சத் தொள்ளாயிரப் பாடல் ஆகும்.

இதன்கண் காணப்படும் 'உதயன்' என்ற பெயர் வத்த நாட்டின் அரசர் பெயரேயாம். வத்தநாட்டுக் கௌசாம்பியை ஆண்ட உதயணனுக்கும் இது மற்றோர் பெயர். அவனுக்குப் பின் வத்சநாட்டைத் தன்னகத்துக்கொண்ட அவந்தி நாட்டை உதயன் என்பான் ஆண்டனன் எனவும் அறிகிறோம்; (இந்தியர் வரலாறு பக. 82. by S. K கோவிந்தசாமி பிள்ளை அவர்கள்.) எனவே அவ் 'வுதயன' என்ற பெயர் வத்ச நாட்டரசர்கள் தமக்கு வழங்கிவந்திருக்கலாம் அதனால் வத்சநாட்டுத் தலைவனாக அமர்ந்த களுசாறன வத்தராயனுக்கும் உதயன் என்ற பெயர் இருந்திருக்கலாம்.

பெருங்கதைப் பதிப்பாசிரியர் டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்கள் வச்சத்தொள்ளாயிரம் உதயணன் திறத்ததோ வேறோ தெரியவில்லை என்பார்கள. உதயணன் திறத்ததாகாது என்னலாம.

உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றென்ப தின்றறிந்தேன்
மன்னுபுகழ் வச்சத்தார் மன்னவா—உன்னுடைய
பொன்னாகத் தெங்கையர்தம் பொற்கைநகச சின்னங்கண்
டென்னாகத் தேயெரிகை யால.

இப்பாடலும அந்நூலதே. இதன்கண் "வச்சத்தார் மன்னவா" என விளித்திருப்பது கூர்ந்துநோக்கற்குரியது. வத்தவநாட்டில் கௌசாமபியிலிருந்து கிறித்து பிறபபதற்கு முன்காலத்தில் ஆண்ட உதயணனை நோக்கி அவ்வாறு விளித்துள்ளது என்றல் எள்ளளவும் பொருந்தாது. இப்பாட்டில் 'சின்னம்' என்ற வடசொல்லும், "வாடைகுளிர" என்ற பாட்டில் 'வாரணம்' என்ற வடசொல்லும் வந்தமையாலும் இந்நூல் மிகப் பிற்காலத்ததென்னலாம், "உன்னுயிரும் என்னுயிரும் ஒன்

1. பெருங்கதை முகவுரை. பக். 9.

றென்ப தின்றறிந்தேன்", அதன் காரணம் "உன்னுடைய பொன்னுகத தெங்கையாதம பொற்கைகநகச் சின்னஙகண்டு என்னுகத்தே யெரிகையால்" எனறு கூறிச் சினனஙகண்டமை கூறியமையாலும, "வச்சத்தாா மனனவா" என்று விளித்தமை யாலும இநநூல பாடப்பட்ட காலததே பாட்டுடைத் தலைவனும இருந்தான என்னலாம. திரு. பண்டாரததாா அவர்கள கருது வதுபோல களுசாறன் வததராயனே பாட்டுடைத் தலைவனுக இருக்கலாம் அவன வததநாட்டுத தலைவனுக ஆனமையின் அவன் அந்நூலில் வத்தவாகோன், வச்சத்தார் மனனவன் எனக் கூறப்பட்டான் என்னலாம்

ஆனுல், "வேட்டொழிவதல்லால்" என்ற பாட்டில் "வச்சத் திளங்கோ" என்றுள்ளமையால இநநூல் தலைவன் வத்தநாட் டரசன் தம்பியாவனே எனறும் ஐயுறலாம். திரு. ஐய்யஙகார் அவர்கள் கோசாமபியை ஆண்ட அரசரே 'இளன' எனனும் திங்கட்குலத்து வேந்தன் வழியினர் என்றும் அதுபற்றியே அவன் வழிவேந்தர் "இளஙகோ" எனப் பெயர் சிறப்பர் என்றும் இவர் வடநாட்டில் ஐலர் எனவும அயிரர் எனவும் பெயர் சிறந்தனர் எனறும, இவருள ஒருவன்தான் காரவேலர் என்னும் கலிங்கவேநதன் என்றும கருதுவாரும உண்டு" என எழுதியதறகேற்ப முதலாம் குலோததுங்கன் படை முதலியான வததராயனே அநநாட்டுத் தலைவனுனமையின் "இளங்கோ" எனப் பெயர் சிறநதான் போலும் எனக் கொள்ளலாம எனவே, கி. பி 1070 முதல் 1120 வரையிருநத குலோத்துங்கன் காலத் தில் இயற்றப்பட்ட வச்சததொளளாயிரம் சஙககாலக் கோசர் ஆராய்ச்சிக்குப் பொருததமாக இராது என்னலாம.

## (4) சில முரண்பாடுகள்

(1) கோசரது பெயர்க்காரணத்தை அடைவாகக், கோசத் திலிருந்து வந்தமையால் கோசர் என்றும், வததநாட்டிலிருந்து வந்தமையாலும், கோசநகரத்து இளன் மரபினரானமையாலும் வத்சகோசர், இளங்கோசர் எனப்பட்டனர் என்றும், வதத் நாட்டுக் கோசர் ஆதற்குமுன் காசுமீர நாட்டில் கோசமுறை கொண்டமையால் கோசர் எனப்பட்டு அங்கிருந்தே வத்த நாட் டிற்கும் தென்னுட்டிற்கும் போந்தனா என்றும் ஆராய்சசி யாளர் கூறினர்கள். பின்னரும் குறுந்தொகைப் பாட்டிற் கண்ட "நாலூர்க்கோசர்" என்பதற்கும வேறொருகாரணம் கற்பித்தனர். "வால்மீகி இராமாயணம் 32-ம் சருக்கத்துப் பிர்மற்கு மகனுகிய குசர் என்பவர் மக்கள் நால்வர் எனவும், அவர்கள் நான்கு ஊர்களைப் படைத்தனர் எனவும்

கூறப்பட்டுள்ளதாதலின், குசர் வழியினர் கௌசர் எனப்பட்டு அவரே கோசர் எனப்பட்டனர் எனவும், முதல்முதல் நாலூரினின்றும் பெருகியதனால் நாலூரகோசர் எனப் பெயர் சிறந்தனர் எனவும் கருதுவது மிகவும் பொருந்தியதாகும் என்றும் கூறினர் (கோசர் பக். 48) 'நாலூர்க்கோசர்' என வந்தமைக்காக வலிய, குசர் மக்கள் நால் ஊர் படைத்ததனால் 'நாலூர்க் கோசர்' எனப்பட்டனர் என்னின், முதற்கண் கூறிய காரணங்கள் யாவும் என்னும்? நாலூர்க் கோசர் என்ற முறையில் வடமொழிப் பெயர் உண்டோ? அறியேம்.

அன்றியும் குறுந்தொகை 15-ஆம் பாட்டில் 'நாலூர்க் கோசர்' என்பதற்குப் பதில் 'நல்லூர்க்கோசர்' என்பதும் பாடம் எனத் தெரிகின்றது; ஆதலின் அதற்கேற்பவும் ஓரிடத்துக்கூறினர் அவர்கள் "இக்கோசர் ஒருதிரளாகச் சபதம் செய்துகொள்பவர் என்பது இவ்வூரை அடுத்துள்ள 'குழுவாணை நல்லூர்' என்ற பெயரான் ஊகிக்கப்படுவது. இக் குழுவாணை நல்லூர்க் கோசர் தாம் குறுந்தொகையில் 'நல்லூர்க்கோசர்' என வழங்கப்பட்டனரோ என ஐயுறுகின்றேன்." (கோசர் பக். 52) 'கழுகுமலைப்புறத்து நாலூர்பற்றி 'நாலூர்க்கோசர்' எனப்பட்டனர் எனினும் பொருந்தும் (பக். 52) என்றும் கூறினார்கள். இவ்வாறு பெயர்க் காரணங்கள் பல எழுப்பினரேயன்றித் துணிபாக ஒன்றும் கூறிற்றிலர்.

(2) "தென்னிந்திய சிலாசாசனத் தொகுதி நான்கில் 388-ஆம் எண்ணிலுள்ள கருவூர்ப்பக்கத்துச் சிலையிலுள்ள வட்டெழுத்துச் சாசனத்தில்,

"ஸ்ரீ கூற்றருதை கொல்லி நிறுவன்
களகார்த்தி கோசமுடைக் கோசமும்,
ஐம்பெருங் குழுவும் சங்கமும்
இவை காத்தானடி என்தலை மேலன"

என வருதலான் வலியுறுதல் காண்க. 'கூற்றருதை' என்பது 'கூற்றகுதை' எனவும் 'கொல்லிநிறுவன்' என்பது 'கொல்லி திருபன்' எனவும் கொள்ளலாம். பொறித்தார் பிழைப்பும் படித்தார் பிழைப்பும் இவையாகும். இதன்கட் களகார்த்தி கோசமுடைக் கோசம் என்பது கோசர்குலம் எனப் பொருள் படும்" (கோசர் பக். 32).

"இவ்வாறு முதற்கண் எழுதியவர்கள், பின் ஓரிடத்தில், "கருவூர்க்குக் கீழ்பால் மூன்றுகல் தூரத்தில் வண்டிவழியின் பக்கத்துக் கிடக்கும் வட்டெழுத்துள்ள ஒரு சிலையில்,

ஸ்ரீ "கூற்றருதை கெல்லி நிருபன் களகா
.. .. . த்திகோச முடைக் கோசமு . . .
.... ...ஐம்பெருங் குழுவு சங்கமிவை காத்தான்
"அடியென் றலைமேலன"

என்ற ஓர் சிதைந்த வெண்பா உள்ளது சாசன வெளியீட்டால் அறியப்படுவது. இதன்கட் 'கூற்றருதை' என்பது 'அருதை எனபவன் கூற்று' எ-று சங்ககாலத்துச் செங்குட்டுவனுக்கு நண்பினனுய், மோகூர் மன்னற்குப் பகையாயிருந்த 'அறுகை'யைத்தான் இப்படிப் பிழைக்க எழுதினரோ என நினைப்புவருகிறது. பின்னே 'கெலலிநிறுவன்' என்பது 'கெலலிநிருபன்' என்பதாகும. கொல்லிநிருபன் சேரன் எனபது தெளிநதது.

"கொல்லியாண்ட குடவர் கோவே" என்பது சிலப்பதிகாரம். இதன்மேல் 'களகார'—'கழகரா' என்பதாகும்; 'கழகத்தவராக' என்பது பொருளாம். இதன்பின் இரண்டோரெழுத்து விடுபட்டிருக்கவேண்டும. அங்ஙனம விடுபட்டாலும் (அ)த்திகோசமுடைக் கோசமும என்னும் தொடரை இவவிரண்டாமடி நன்கு தெளிவிப்பதேயாகும் (கோசர் பக் 49, 50)"

இவ்வாறு எழுதியுள்ளார்கள். சாசனத் தொடர்கள் இரண்டும் ஒன்றே என என்றெண்ணுகின்றேம முதற்கண் 'கூற்றருதை' என்பதைக் 'கூற்றகுதை' எனவும், பின்னர்க் 'கூற்று அருதை' எனவும் கொண்டதன் காரணம் விளங்கவில்லை. 'அகுதை' வரலாறு எழுதியவிடத்தில் 'கூற்றகுதை' என்றும், பின்னர் 'அறுகை' என்றும் மாறுபட்டுக் கூறினர். முதற்கண் 'களகார்த்தி கோசம்' எனக்கொண்டு பின்னர் (எழுததில்லாதிருக்கவும பொருத்தமுற நிரப்பி) 'களகார' எனக் கொண்டதும் எதனுல் என விளங்கவில்லை.

இம் மாறுபாடுகளுக்குக் காரணம், ஆராய்ச்சியாளர் கோசர் வரலாறு பற்றிய குறிப்புக்களைக் குறித்த செப்பம் செய்தற்குமுன் காலம் கடந்தமையாக இருக்கலாம்.

(தொடரும்)

# மருட்கை

[புலவர், திரு. பொ. வே. சோமசுந்தரனார்]

அண்மையில் எமமூராக்கு அணித்தாக உள்ள ஒரு கிராமத்தின்கண் நிகழ்நத தமிழ்க்கழக ஆண்டுவிழாவிற்குச் சென்றிருந்தேம். அவவிழாவின்கண சொறபொழிவாற்றிய நண்பர்களுள் ஒருவர், இக்காலததே புதுவதாகத தோன்றி உலகெங்கும் பரவிவருகின்ற பூதநூலறிவினையும், அதன் வியத்தகு சாதனைகளையும, பாரிததுப பேசி நம நாட்டினா அபபுதிய அறிவினை ஆவததுடன் வரவேறறு நன்கு பயின்று ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேலைநாட்டினரைப் போன்று முன்னேற்றம பெறுதல் வேண்டும் எனறும், நாம் பகுததறிவோடு பொருநதாத நம பண்டைப் புராண முதலியவற்றில், நமது அருமநத காலததைதக் கழிததல கூடாதென்றும, மேலும இக்கால விஞ்ஞான அறிவு நம பண்டைக்காலததுச சான்றோருடைய, கடவுள, மறுபிறப்பு, கட்டு, வீடு என்பனபோனற நம்பிக்கைகளைத் தளர்த்தி வருகின்றதென்றும, பகுததறிவோடு பொருந்தாத மூடநமபகங்கள் நம் நாட்டில் மலிந்து கிடக்கினறன என்றும், அவறறைப் புறக்கணிததொதுக்கிப பயன்மிகவுடைய விஞ்ஞான அறிவினைப் பெருககிக்கோடலே நாம எதிர்காலததே இன்புற்று வாழ ஏதுவாம எனறும், இன்னோரனன முறையில நீண்டதொரு சொற்பொழிவாற்றினர்.

அந்நண்பர் கூறியபடி, மிகபபழைய காலத்தே விலஙகுகளோடு விலங்காய்க் காட்டினூடே குகைகளில் வாழ்ந்த மக்கள், இன்று விண்ணளாவிய பன்னிலை மாடங்களில் வாழ்வதும், சிறகா இல்லாதிருநதும், வானிடை விரைந்து பறந்துபோதலும், பலலாயிரங் காவதத தொலைவின்கண் உள்ளாரோடு வானொலியின் வாயிலாய் நொடிப்பொழுதில அளவளாவுதலும், நொடிப்பொழுதின்கண் எண்ணிறந்த மக்கள் வாழுமொரு கோன காத்தை அழிக்கவல்லராதலும், விண்ணிலே சேய்மைககண் உள்ள செவ்வாய் மண்டில முதலிய அயல் மண்டிலங்கட்குச் செல்ல முயலுதலும, இன்னோரன்ன பிறவும் செய்யவல்லராதலை எண்ணுந்தோறும் அறிவுடையோர் வியப்படைவர் என்பது வாய்மையே. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அப்புத்தறிவு உலகெலாம் பரவித் தனது நன்மை அல்லது தீமைகளைப் பயந்தே விடுதலும தப்பாது. இப்புதிய பூதநூலறிவினைப் போற்றிப் புகழ்கின்ற அந்நண்பர் போன்றே, யாமும் அதனைப்

போற்றுவோம். அவர் ஆ! ஆ!! என வாயங்காந்து வியக்குமாறு யாமும் வியப்போம். சிற்சில செவ்விகளில் வியப்பினால் நாம் மதிமயங்கி ஒன்றனை மதிக்குமளவிற்குமேல் மதித்தலும், மதித்தற்குரியவற்றை மதியாமல் விடுதலும் நம்மை யறியாமலே செய்துவிடுகின்றோம். மருட்கையின் இயல்பு அத்தகையது. புதுமையால் ஒரோவொன உண்டாகும் மருட்சியினால் மதி கெடாதிருக்கும் வன்மை, நுண்மாணுழைபுலமுடைய சான்றோர்க்கு மட்டுமே கைவந்ததாம். ஏனையோர் புதுமை மருட்சியில் மதிமயங்குதலே இயல்பாகும்.

முன்னர் நாம் கூறிய நண்பர், புதிய விஞ்ஞான அறிவின் சாதனைகளிலே—அவற்றின் புதிய ஆரவாரங்களிலே—மருண்டவராதல் வேண்டும். அங்ஙனம் மருண்டமையால், புதிய இவ் விஞ்ஞான அறிவு, நம் பழைய சான்றோர்களின் கடவுள் நம்பிக்கை முதலியவற்றை இக்காலத்தே தள்ளாதி வருகின்றதென்றும், நாம் இன்பமுற்று எதிர்காலத்தே வாழவேண்டுமாயின் இப்புதிய விஞ்ஞான அறிவினை வரவேற்றுப் பெருக்கிக் கோடல் வேண்டும் என்றும் மதிமைசாலா வறுமொழிகள் பலவும் வழங்கினார்.

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியனார், தமது தொல்காப்பியத்தே மெய்ப்பாடு கூறுமிடத்து மருட்கை என்னும் மெய்ப்பாட்டிற்குப் பிறப்பிடம் கூறுவார்,

> "புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
> மதிமை சாலா மருட்கை நான்கே" (மெய்ப்-சூ எ).

என நுண்ணிதிற் சூத்திரம் செய்திருத்தலைக் கற்ற மேலவர் யாரும் உணர்வர். அதன்கண் மருட்கைக்குப் புதுமை பிறப்பிடமாகக் கூறியதோடன்றி, அம் மருட்கைதானும் "அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமல் திரித்து வேறுபடுத்து வரும் இயல்பிற் றென்பார் 'மதிமைசாலா மருட்கை' என நுண்ணிய அடைகொடுத்தோதியதும் ஈண்டு நினைவுகூர்ந்து மகிழற்பாலது. புதிய விஞ்ஞான அறிவின்கண் ஆற்றவும் மருட்கைகொண்ட இந் நண்பரின் சொற்கள் மதிமைசாலா மடமைச் சொற்களாதலை இனிச் சிறிது ஆராய்ந்து காட்டுதும்.

உலக மகா கவி என அறிஞர் எல்லாம் போற்றிய புலவர் பெருமகன் இரவீந்திர நாத தாகூர் என்பார், புதுவையிலிருந்த அரவிந்த அடிகளாரைப் பற்றி வரைந்த கட்டுரையொன்றனில், "இக்காலத்தே மேலை நாட்டிற் றோன்றி வளர்ந்து வரும் பூதநூலறிவு நம்மைக் கடவுளின் கருப்பக கிருகத்திற்கு அழைத்துச் செல்கின்றது,"

என நுண்ணிதின் வியந்துரைத்திருத்தலை யாம் ஓதியுள்ளேம். ஒப்பற்ற இவ் வறிஞர் பெருமானும், நம் நண்பர்போன்றே இப் பூதநூலறிவினை வியக்கின்றாராயினும், அவ் வியப்பு, அவர்தம் கூர்த்த அறிவினை நிலைதிரித்து மயக்கிவிடவில்லை மயங்காமை யோடன்றி அப்பூத நூலறிவின்கண்ணும், பிறர் அறிவிற்குத் தெற்றென விளங்காத பெரு நன்மை ஒன்றுளதாதலை அப் பெருமகன் நுண்ணிதின் எடுத்துக்காட்டும் போதோ அவ ருடைய நுண்மாண் நுழைபுலனின் கூர்மைகண்டு எற்றோ இவர் திறம் என யாம் வியக்கவும் வியக்கின்றேம் இனி இப்பூத நூலறிவு நம்மைக் கடவுளின் கருப்பக் கிருகத்திற்கு அழைத் துச் செல்கின்றதெனனும் இப் பெரியார் சொல்லின் விளக்கம் யாதென இங்கு யாம் ஆராயவேண்டா. ஒரு பொருளைப்பற்றி இருவர் கொண்ட கருத்துக்கள் ஒன்றனை ஒன்று முரண்பட் டிருத்தலமட்டுமே யாம் இவ்விடத்து உணர்தல் போதியதாம்

இனி, மனிதனுக்கு வெளிப்புறத்தே விரிந்து கிடக்கும் மண் முதலிய இப் பூதங்களின் இயல்புகளை நுண்ணிதின் ஆராய்வதாகிய இப்பூத நூலறிவு, மனிதனின் அகத்ததாகிய உயிர் இயல்பினையும், அவ்வுயிர்க்கும் அப்பாலாகிய இறையியல் பினையும் ஆராய்ந்து கண்ட நம் முன்னையோர் காட்சிகளை எவ்வாறு தவறுடையன என்று காட்டவியலும்? ஒரு பொரு ளின் இயல்பினைத் தனித்தனி ஆராய்வாருடைய கொள்கைகள் தம்முள் முரண்படுமாயின் அவற்றுள் சரியானதொன்று, தவ றான கொள்கையைப் பொய்ப்படுத்தல் இயல்பாம் இருவேறு பொருள்களைத் தனித்தனி ஆராய்வாருடைய ஆராய்ச்சி முடிவு கள், ஒன்றை ஒன்று முரணப்படுவ தெங்ஙனம்? அகக் கண் கொண்டு ஆராய்ந்து நம் பண்டைச் சான்றோர் தம் தெய்விக உணர்ச்சி வன்மையாலே உணர்ந்து கூறிய கடவுளியல், உயிரியல் முதலியன அவ் வகக் காட்சித் துறையில் சிறிதும் கண் விழித் திராத பூதக் காட்சிப் புறவிழியாளரால் தளர்த்தப்படுகின்றன என்னும் கூற்றுப் பொருளில் வறுங் கூற்றேயாம்.

இக்கால விஞ்ஞானத் திறவோர்களில் பலர் அகக் காட்சி அறிவினைப் பொதுமுறையினும் ஒரு சிறிதும் பெற்றிலாப் பெற்றியர் ஆதலை கூர்ந்துணர்வார் நன்குணரலாம் இனி இவர்தம் வியத்தகு சாதனைகள் தாமும், வெறும் ஆரவார நீர்மையுடையனவன்றி, உயிர் வேண்டும் இன்பத்தை அதற்கு நல்கும் ஆற்றலுடையனவும் ஆகமாட்டா இவற்றைப் பரிந்து வளர்த்துக் கோடலால் மக்கள் இன்புற்றமர்ந்து வாழ்தல் கூடும் என எண்ணுவதும் மதிமைசாலா மருட்கையாலுண்டாய மடமையே யாகும். எற்றாலெனின், மெய்க்காட்சித்திறவோர்

கள், மக்கள் எய்தும் துன்பத்திற்கெல்லாம் ஏதுவாவது அவாதம் அகத்துறையும் பேராசையே ஆகலின், துன்பம் இல்லாது இன்புற்று வாழ எண்ணுவோர் எல்லாம், அப் பேராசை தூண்டியவழிப் புறப்பொருள்களின் நிகழும் பற்றினை ஒருவித் தமக்குத் தாமே அடங்கி அமைதல் வேண்டும் என நன்கு விளக்கிக் கூறியுள்ளனர்! அகக் காட்சித் திறவோருள் தலை சிறந்த நந் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்,

> "அவா வில்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்
> தவாஅது மேன்மேல் வரும்,"

என்றும்,

> "இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
> துன்பத்துள் துன்பங் கெடின்."

என்றும்,

> "பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
> பற்றி விடாஅ தவற்கு"

என்றும் ஓதியுள்ள, இப் பொன்மொழிகள் மனிதன் துன்புறுதற்குரிய காரணத்தையும், அவன் அத் துன்பத்தினின்றும் தப்பி உய்தற்குரிய வழியையும் மிகவும் நுணுக்கமாக விளக்குகின்றன. இன்பம் வேண்டும் என்றும், துன்பம் ஒழிகவென்றும் விரும்பும் ஒவ்வொரு மனிதனும் இப் பொன்மொழிகளை உளத்திற்கொண்டு அவை கூறும் வழியே ஒழுகுதல்வேண்டும். இவை உண்மை என்பதில் ஐயுறுவார் அறிவிலிகளன்றி வேறிலர். இந் நெறி மறுக்கவியலா உண்மை நெறியெனின், புதிய விஞ்ஞானத் திறவோர் சாதனைகள் மனிதர்க்கு இன்பம் தருந் தகுதியுடையன அல்லவெனபதும் உண்மையே யாகும். ஏனெனில் அச் சாதனைகள் அனைத்தும் மனிதனுடைய பேராசையை மிகுவிக்கும் சாதனமாவதல்லால் அவாவறுத்தற்கு உதவுவன அல்லவே.

இனி, இவ் விஞ்ஞானம் இக்காலத்தே செய்திருக்கும் சாதனைகள் அனைத்தும் மனிதர்கள் தொழில் செய்வதற்குரிய கருவிகளாந்துணையே அன்றிப் பிறிதில்லை. இவ் வுலகியல் வாழ்விற் கருவிகள் இன்பத்தைமட்டும் விளைப்பனவுமல்ல. யாதாமொரு சிறந்த கருவியும் அதனைக் கையாளும் கருத்தாவினது மனநினைவிற்கேற்ற பயனையே விளைவித்தல் இயல்பு. கருவி சிறந்ததாகும்பொழுது கருத்தாவின் மனநினைவு விரைவில் செயற்பட்டு அதன் பயனும் மிகுதியாகலாம். ஆகவே, நன்மை தீமைகள் செய்யும் கருத்தாவைப் பற்றியதாக இருப்பதன்றிக்

கருவியைப் பற்றியனவாகாமை காணலாம. கருத்தா மனநலம் வாய்நதவனுயிருநது அவன் நல்ல செயலைச் செய்யுங்கால் சிறந்த கருவி அவனுக்கு நனமையை விளைவிக்க உறுதுணையாய் அமைநது பெரிதும் நன்மை தருவதாகலாம அதனைத தீயவன் கையாளின எனனுமே! பண்டைநாட் சானறோா மக்களினத்திற்கு நன்மை விளைவிக்கவேண்டின் அவரை மனநலம் உடையராக்குதலே முதற் கடமையாம எனக் கண்டு, அம் முயற்சியிலேயே பெரிதும முயன்றுவநதனா எனபதை, வரலாறுகளானும நம பண்டை நூல்களானும உணரலாம் அம் முயறசியின் பயனுக மக்கட்கூட்டம சிறநத பண்பாடு பெறறு உயர்நதும் வந்தது. இற்றைநாள இம் முயற்சியே பெரிதும் புறக்கணிக்கப் பட்டு வருகினறது கடவுள நமபிக்கை போன்றவைகளே மக்கள் மனததுயரை மாற்றவல்லன இதனை,

> “தனககுவமை யில்லாதான் தாள் சோநதாாக கல்லால்
> மனககவலை மாற்றல் அரிது ”

என்னும மெய்ம்மொழியானும உணரலாம் பூதஞானம் மிக்குப் பெருகி உளள அமெரிக்கா முதலிய மேலைநாட்டின்கண் வாழும் மக்கள எல்லாம அவ் வறிவினபயனுக இன்புற்றமாநது கவலையின்றி வாழகின்றுர்கள என்று யாரே கூறவல்லார்! அந நாட்டினகண் ஆண்டுகளதோறும தமககுறற மனக்கவலையை மாற்ற வழியறியாது அதனைத் தாஙகி வாழவுமபொறுது தூக்கிட்டுத் தற்கொலை செய்வாா தொகை பெருகி வருகினறது என்னும் செயதியையும் யாம் செய்தித தாளகளிற் காண்கினறேம் அணுக்குண்டு முதலிய கருவிகள் மாநதர்க்கு இன்பம விளைப்பது எவவாற்றுன? அண்மையில நிகழநத போர் காரணமாக, சப்பான நாட்டில் மக்கள் வறுமையுறறுக் கிழமை ஒன்றிற்கு நானூறுபோ வீதம் தற்கொலை செய்துகொள்கின்றனர் என்று ஒரு செய்திததாள் கூறக் கண்டுள்ளேம. இங்ஙனமெல்லாம் ஆராயநது காணுங்கால் இப புத்தறிவு மக்கள வாழ்க்கையில் இன்பததைச சோக்கும என்பது பொய்மமை என்றே தோன்றுகின்றது.

பண்டைநாள் உரோமாபுரியில, வாழ்ந்திருநத ஞானமுனிவராகிய சாககிரட்டீசு என்பவரின அடக்கமுடைமை கண்டு, அவரை உலகியலறியாதவர் என்றெண்ணிய சிலா, அந் நகரததே நிகழ்ந்த பொருட்காட்சிச் சாலைக்கு அழைத்துச் சென்று, ஆஙகுளள வியததகு பொருள்களைக் காட்டினராம். அக் காட்சியில, அம் முனிவர் பெரிதும் வியப்படைந்திருப்பர் என்று கருதிய அவர்கள், பெரியீர்! இப பொருள்களைப்பற்றித் தாங்கள்

யாது கருதுகின்றீர்கள்? என்று வினவியபோது, அம் முனிவர் "அம்மமம! வியப்பு! வியப்பு!! இவ் வுலகில் எனக்கு வேண்டாத பொருள்கள எததுணை ஆயிரம் இருக்கின்றன" என்று மறுமொழி கூறினராம சாக்கிரட்டீசின் இம் மறுமொழியின் கருதது, உண்மையான இன்ப நாட்டமுடைய மனிதனுக்கு இவ் வறிய ஆடம்பரப் பொருள்களுள் ஒன்றேனும வேண்டற்பாற் றன்று என்பதேயாகும இனறும, இப் புதிய விஞ்ஞானக் கருவிகளைப்பறறி யாரும் அவா மெயயுரையையே மீண்டும் கூறிக்கோடல மிகையனறு உண்மையான மெய்வாழ்வு தலைப் படும மனிதனுக்கு அவன் உடலோமபிக்கொளள இறைவனால் அவனுக்கு அளிக்கபபட்ட கால் கை முதலிய உறுபபுககளே சாலும் இன்பததின் இயல் கண்டு—அதனை எயதும நெறி கண்டு—ஒழுகி அதனைப பெற்று மகிழவோ எனில், நம் தெய் வப் புலமைத திருவளளுவனா திருவாய் மலாநதருளிய தெய் வத திருக்குறளாகிய மெய்ந நூலொன்றே அமையும் மறறு இப் புதிய விஞ்ஞானிகளின் கருவிகளில்—குணடூசி முதல் அணுக்குணடிறுதியாகக கிடநதவறறுள—யாதொனறும் அந் நல்லோனுக்கு வேணடவே வேணடா

---

## ஆட்சி நிலை

[நெல்லை. திரு க சுப்பிரமணியன்]

நோய்வாய்ப் பட்டோன் யாககையின் நிலையைத
திருத்தமா யறியா மருததுவ னொருவன்
உயிரவதை செய்தல் ஒப்ப, நம் ஆள்வோர்
அனைவரும் வினைபுரிந் துலகினில் வாழப்
பகுத்துண வளிததுப் பண்பொடு சிறகக
இயற்கைச செலவம் எல்லாம் பொதுவே!
தனிமனி தற்கிலை இனியெப் பொருளும்
புதுமை உலகினில பொதுமை பேண
வழிவகை எண்ணித் துணியா
அழிவும் பழியும் அடைகின் றாரே!

---

# குருகுல வாழ்க்கை

[வித்துவான், திரு. செ. வேங்கடராமச் செட்டியார்,
S. V. O. கல்லூரி, திருப்பதி.]

குருகுலம் என்பது ஆசிரியரின் இருப்பிடம் என்னும் பொருளது 'ஊரானோர் தேவகுலம்' என்புழியும் 'குலம்' என்பது இருப்பிடம் எனனும பொருளில் வநதுளது காண்க. தேவகுலம - தேவாலயம. அககாலததுக குருவின் வீடே கலை பயில் கழகமாக அமைந்தமையின் 'மாணவா கலைபயிலும பள்ளி' என்ற பொருளில் 'குருகுலம' என்ற சொல் வழஙகிவந்துளது. நம் நாட்டுப் பழங்கால மக்கள், இக் குருகுல முறையில்தான் கல்வி பயின்றாகள் இக்காலக் கலவி முறையோடு அக்காலக் குருகுலமுறையை ஒப்பிட்டுப்பாாததால் மலைக்கும் மடுவிற்கு முளள வேறுபாடு காணப்படும.

கல்வி பயிலுமுறை நாளுக்குநாள முன்னேறிக்கொண்டு வருவதாக நாம எண்ணுகின்றோம. வானொலிமூலம கலவியைப் பயிற்றுவதே சிறந்தமுறை என்றும் நமப நேரலாம் ஆசிரியாகள் பலர் தேவையின்றி—அவாகட்குத தரும ஊதியமாகிய பணச்செலவுமின்றிச சுருங்கிய செலவில் வானொலிமூலம் கல்வி கற்பிககமுடியும் என்று காட்டுவார் உளராயின் நாம் நமப வேண்டியதுதானே! இப்பொழுது காணபபடும் கல்விமுறையில் ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் நெருங்கிய தொடர்பில்லை. குறிதத காலததில குறிப்பிட்டதோரிடத்தில் மாணவாகளும் ஆசிரியர்களும ஒருங்கு சோவர் குறிப்பிட்ட பாடஙகளை ஆசிரியர் பயிற்றுவா. மாணவருள் சிலர் பயிலவர், சிலர் வேறு சிந்தையிலோ உறக்கத்திலோ ஆழ்ந்துவிடுவார்கள். குறித்த காலமுடிந்தவுடன் அவரவாகள் இருபபிடம் நோக்கிச் செல்வார்களா. மாணவர்களா ஆசிரியர்களிடத்தில் ஆழ்நத அன்பும் அடக்கமும் உடையவராக இருக்கவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை ஆசிரியர்களும் மாணவர்க்குத் தநதைபோல் அன்பு காட்டி அறிவூட்டும நெறியுமில்லை கல்லூரி வகுப்புகளில் ஓராசிரியர் நூற்றுக்கணக்கான மாணவர்கட்குப் பாடம் கற்பிக்கும் நிலை ஏற்படுவதால் அவர்கள் எல்லாரிடமும் ஆசிரியர் அன்புகாட்டி அவர்கள் ஒழுக்கத்தை யுயர்த்துவது இயலுவதா் யில்லை. அத்துணை மாணவர்களும் ஆசிரியர்பால் அன்பும் அடக்கமுமாக இருந்து பழகவேண்டிய நிலையும் தேவைப்படவில்லை; இயலவுமியலாது.

மாணவர்களுள் சிலர் ஒழுக்கத்தில் உயர்ந்தவராக விளங்கினால் அந்நிலை ஆசிரியரால் வந்ததாகக் கருதமுடியாது மாணவர்களில் சிலர் தீயொழுக்கமுடையவராகத் திகழ்ந்தாலும் அதற்கு ஆசிரியர்கள் காரணமாகமாட்டார்கள் மாணவர்கள் ஆசிரியர்களோடு தொடர்புடையராயிருப்பது ஒருநாளில் சில மணிநேரமே அவர்கள் பலமணி நேரத்தை இப்பரந்த வுலகில் விரும்பியாங்குச் செலவிடுகின்றனர். எத்துணையோ தொடர்புகள்—எத்துணையோ பழக்கவழக்கங்கள்—எத்தனையோ சூழ்நிலைகள் அவர்கட்கு உண்டாக வழியுண்டு செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும் சினிமாக்களும் வானொலிகளும் மாணவர்கள் கருத்தைக் கவர்ந்து வேறுவழியில் திருப்ப வழியுண்டு சூழ்நிலை நல்லதாக வாய்க்கப்பெற்ற மாணவர்கள் நல்லொழுக்கமுடையராய்—நல்லறிவினராயத் திகழ்கின்றார்கள் தகாத சூழ்நிலையில் பழகுகின்றவர்கள் ஒழுக்கங்கெட்டு அறிவுகெட்டு அல்லலுறுகின்றனர் குறிப்பிட்ட கல்வியைக் கற்குமிடமாகமட்டில இக்காலக் கல்வி நிலையங்கள் அமைகின்றனவேயன்றி ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் நெருங்கிய தொடர்பை யுண்டாக்கி மாணவர்க்குக் கல்வியொடு ஒழுக்கத்தையும் கற்பிக்கும் உயர்நிலையங்களாகத் திகழவில்லை. இது இக்கால கல்விமுறை.

பழைய குருகுல வாழ்க்கை இத்தகையதன்று ஓராசிரியரிடத்தில ஒருசில மாணவர்களே பயிற்சி பெறுவார்கள். அம்மாணவர்கள் வாழ்க்கை ஆசிரியரையே நோக்கிநின்றது மாணவர்கள் ஆசிரியரிடமே ஒப்படைக்கப்பெற்றார்கள். மாணவர்கள் ஆசிரியரது நிழலைப்போல நீங்காது உடனுறைந்தார்கள் ஒரு மாணவன் பிறந்த சூழ்நிலை கெட்டதாக இருப்பினும் அவன் கல்வி பயின்ற குருகுலத்தால சிறந்தோனுவான். புலால் உண்ணும் குடும்பத்தில பிறந்த ஒரு மாணவன், தன் ஆசிரியர் புலவுநீக்கிய உணவினராக இருத்தலைக் கண்டு அவர் போலவே புலாலுணணாது தூயவனாக மாறிவிடுவான் பிற்காலத் தன் குடும்பத்தையும் அங்ஙனமே திருத்துவான. அரசர் குடியிற் பிறந்தவரும் ஆண்டி வயிற்றில் பிறந்தவரும் குருகுலத்தில் ஒரு தன்மையராகவே மதிக்கப்பட்டனர். பிறப்பு காரணமாகவோ செல்வச் சிறப்புக் காரணமாகவோ வரும் உயர்வு தாழ்வுகட்கு அங்கு இடமில்லை எல்லோரும் ஆசிரியர்க்குத் தொண்டுபுரிய வேண்டும். கல்விகற்கும நேரமேயன்றி மற்றை நேரங்களிலும் ஆசிரியரை அகலாது தொடர்ந்திருந்து அவரது பண்பு ஒழுக்கங்களில் பயிற்சிபெற்றனர்

ஆசிரியர்க்குத் தொண்டுசெய்வதைத் தெய்வத்தொண்டாக மதித்தனர். 'எழுத்தறிவித்தவன் இறைவனாகும' என்பது

மாணவர்களுடைய திடமான நம்பிக்கையாக இருந்தது. 'உலகத்து உயர்ந்த தகுதியுடையவர் ஆசிரியரே; அவரால் ஆகாத செயல் யாதுமில்லை' என்பது அம்மாணவர்கள் எண்ணமாக இருந்தது. இத்தகைய நம்பிக்கையால் மாணவர்கள் கல்வியாலும் ஒழுக்கத்தாலும் சொல்லாலும் செயலாலும் ஆசிரியரைப்போலத் திகழவேண்டும் என்று ஆர்வங்கொண்டு முயன்றனர். ஒரு கதை சொல்வதுண்டு: கடலைக் கண்டுவந்த ஒருவன், 'கடல் மிகப் பெரியது; அதை யாரும் கையால் நீந்திக் கடக்கமுடியாது' என்று ஒரு மாணவனை நோக்கிக் கூறினன். அதைக்கேட்ட அம்மாணவன், 'எங்கள் ஆசிரியரால் கூடவா கடக்கமுடியாது?' என்று கேட்டானும் இந்தக் கதை ஒரு வகையில் எள்ளி நகையாடத் தக்கதுபோல் தோன்றினும் ஒரு பெருஞ்சிறப்பு அதில் அமைந்துள்ளதை யாரும் காணமுடியும் அம்மாணவன் ஆசிரியர்பால் அளவற்ற நம்பிக்கையுடையவனாக இருந்தான் என்பதுதான் அச்சிறப்பு. இத்தகைய நம்பிக்கை அம்மாணவனை உயர்ந்த தகையதே ஆயின், ஆசிரியர் சிறந்த தகுதியினர் ஆதல்வேண்டும். ஆசிரியர், அறிவாலும் ஒழுக்கத்தாலும் பிறவற்றாலும் உயர்ந்தவராயின் அவ்வாசிரியரை நம்பி ஒழுகும் மாணவனும் உயர்நிலையடைவது திண்ணம். அறிவொழுக்கங்கட்குத் தந்தை ஆசிரியரே என்பது அக்கால மாணவர் கொள்கையாக இருந்தது. ஆசிரியர் ஒழுக்கநிலையை அப்படியே பின்பற்றி வாழ்க்கை நடத்துவது அம்மாணவர் சிறப்பாக இருந்தது.

இத்தகைய குருகுல வாழ்க்கையிலிருந்து குருவைப்போல் ஒழுக்கத்தில் சிறந்துவிளங்கின மாணவர்க்கு எடுத்துக்காட்டு வேண்டுமாயின் இராமபிரானைக் கூறலாம் கம்பர், இராமபிரானுடைய குருகுல வாழ்க்கையைச் சுருக்கமாகத் தக்கவிடத்தில் விளக்கியுள்ளார்.

இராமபிரான், தசரதச் சக்கரவர்த்தியின் தவப்புதல்வன். வசிட்டமுனிவரையே குருவாகக்கொண்டு கலைபல கற்றுக் கலைநலத்தாலும் ஒழுக்கநலத்தாலும் சிறந்து விளங்கினவன். அவன் வசிட்ட முனிவன் கட்டளையின்படியே கௌசிக முனிவன் வேள்வி காக்கத் தம்பியொடு கானம் நண்ணிக் கௌசிகமுனிவர் வேள்வியை இடையூறொழித்து முற்றுவித்தான். பின் அக்கௌசிகமுனிவர் விரும்பியவண்ணம் மிதிலையை நண்ணினன் அம் முனிவரொடு. மிதிலையில் கன்னிமாடத்தில் இருந்த சீதையின் எழிலைக் கண்ணுற்றுக் காதல் கொண்டான். பின்னர் சனகனைக் காண முனிவரொடு தம்பியுடன் சென்றான். சனகன், இளைஞராகவுள்ள இராம இலக்குவர்களைக் கண்டு அவர்

முகத்தழகைத் தன்னிரு கண்களால் பருகுவான்போல ஆர்வ மொடு பார்த்து, 'அவ் வெழில்வாய்ந்த அரசிளங்குமரர் யாவர்?' எனக் கௌசிகமுனிவரை வினவினன். அம் முனிவரும் 'இவர், பெருந்தகைமைத் தயரதன் புதல்வர்' என்று சுருங்கச்சொல்லிப் பின் சூரியன் முதலாகவந்த அவர் குலமுறையை விளக்கிக் கூறுகின்றார்.

அங்ஙனம் கூறுகின்றவர், சீதையைப் பெற்ற சனகன் உள்ளத்தில் எழுகின்ற எண்ணங்களை எவையென வுணர்ந்து அவன் மனம் நிறைவுறும் வகையில் சில சொல்லுகின்றார். நீண்ட காலமாக மணமின்றி இருக்கும் சீதை இராமபிரானுக்கே மனைவியாகத் தக்கவள் என்பதையும், அவள் பொருட்டாக வைத்துள்ள வில்லை வளைக்கத்தக்க ஆற்றலுடையவன் இராமனே என்பதையும் நன்குணர்ந்தவர் கௌசிகமுனிவர். இக் கருத்தி னாலேயே தம் வேள்வி முடிந்தும் இராமபிரானை அயோத்திக்கு அனுப்பாது மிதிலைக் கழைத்துவந்தார். தம் குறிப்பைச் சனக னிடத்தும், 'விருந்தினர்கள் நின்னுடைய வேள்வி காணிய வந் தார் வில்லுங் காண்பார்' என்று முதலில் குறிப்பிட்டுள்ளார்.

சனகன் தன்னொரு மகளை இராமபிரானுக்குக் கொடுக்க வேண்டுமாயின், இராமபிரான் வில்லை வளைத்தாக வேண்டும். வில்லை வளைத்தாலும், சிறந்த குலத்தில் பிறந்தவனாய் ஏகதார விரதத்தைக் காக்கவல்ல குடிப்பிறப்பு உடையவனாய இராம பிரான் இருந்தாலதான் சனகன் தன் தவப்புதல்வியை மன முவந்து மணஞ்செய்து தருவான். சீதையை மணக்கும் இராம பிரான் காதலைப் பகிர்ந்துகொள்ள வேறெவரும் இல்லாதிருக்க வேண்டும் என்று பெண்ணைப்பெற்ற சனகன் உள்ளம் நினைப் பது இயற்கைதானே! 'இராமபிரான் வில்லை வளைத்தாலும் சூரிய குலத்தில் பிறந்து சிறந்தோன ஆனாலும் பல மனைவியரை யுடைய தசரதனுக்கு மகன்தானே! 'தந்தை யறிவு மகனறிவு' என்பார்களே! தந்தையைப்போலவே இராமபிரானும் பல மனைவியரை மணக்கும் எண்ண முடையனாயின் நம் செல்வப் புதல்வி சீரழிவாளே! என் செய்வது?' என்று சனகன் உள்ளம் ஏங்குவது இயற்கைதானே? இதையெல்லாம் எண்ணிப் பார்த்து அநுபவமிக்க கௌசிக முனிவர், சனகன் மனநிறைவு பெறும்வண்ணம் சூரியகுலத்தின் சிறப்பையெல்லாம் சொல்லித் தயரதனைப்பற்றிக் கூறும்இடத்து,

"திறையோடு மரசிறைஞ்சுஞ் செறிகழற்கால் தயரதனும்
பொறையோடு தொடர்மனத்தான் புதல்வரெனும் பெயரேகாண்
உறையோடு நெடுவேலாய் உபநயன விதிமுடித்து
மறையோடு வித்தைவரை வளர்த்தானும் வசிட்டன்காண்."

என்று கூறிச் சனகன் ஐயத்தைப் போக்கிவிட்டார் முனிவர்.

'உறையோடு நெடுவேலாய்' எனச் சனகனை விளிக்கின்றார் முனிவா. போர் இல்லாமையால் உறையின்கண் தங்கிய வேலை உடையவன எனச சனகன் திண்மையை விளியிலேயே விளக்கி விட்டார் முனிவர். சனகனைக் காட்டிலும தயரதன் சிறநதவன எனபதைத "திறையோடு மாசிறைஞ்சும் செறிகழற்கால் தயரதனும பொறையோடும் தொடர் மனததான" எனற தொடரால் விளக்கினா திறைப பொருளோடு அரசர் பலர் வணங்கததக்க காலகளையுடைமை, எதிரினறி மனனரையெலாம வெனறடககிய தயரதன் போாததிண்மையை விளககுதல காண்க. மன்னர் பலர் பகைததிறம பூணடு மிகைத்திறஞ செய்தாராயினும் தயரதன வலியறிநதபின் திறைப்பொருளோடு அவாகள வணங்குவாராயின் அவா பழைய தவறறை மனங கொளாது பொறுமை பூண்டு மன்னிததருளுவான என்பதை விளக்கவே 'பொறையோடுந தொடர் மனததான்' எனறு கூறினா. இனிச் சனகன், தன் மகள் புககசும மன்னா பலா வணஙகத்தகக செல்வச சிறபபுடையதெனவும் தன் மகளை மருமகளாகப் பெறுதற்குரிய தயரதன், சீதை அறியாமையால் செய்யுங் குறைகளைக் கணடு சினவாது பொறுமை காட்டிப பெருமைபடுததககூடியவன எனவும் நினைநது உளம பூரிக்கவேண்டி இஙஙனம கூறினா எனினும அமையும். இவவாறு கூறியதால வீரததாலும செல்வததாலும பொறுமையாலும் தயரதன சிறந்தவன என்பது பெறபபடடதேயொழிய பல மனைவியரையுடையன தயரதன் என்னும் குற்றததிற்குக் கழுவாய் யாதும் விளமபபபடவில்லை. ஆகவே, அததகைய தயரதன் புதல்வனாகிய இராமபிரானும் செலவததால வீரததால் பொறுமையால தநதையைப போன்றவனாதலபோலவே பல மனைவியரை மணப்பதிலும் அவனையொதது விளஙகினால் என் செய்வது என்ற சனகன ஐயத்தைப் போககவே, 'தயரதனும பொறையோடும தொடா மனததான் புதல்வரெனும பெயரேகாண்' என்று கூறுகின்றா முனிவா. இவவாறு கூறியதால் இராம இலக்குவாகள தயரதன் புதல்வர் என்பது பெயாமாததிரையே யாதலும் உண்மையில் வேறு யார்க்கோ புதல்வராதலும் பெறச செய்தார்.

உண்மையில் இவர்கள் யார்க்குப் புதல்வர்கள் என்பதை 'உபநயனவிதி முடித்து மறையோடுவித்திவரை வளர்த்தானும வசிட்டன் காண்' என்ற தொடரால் விளக்கினார். முகத்திலிருக்கும ஊனக் கண்களினும் சிறந்ததாய் அகக்கண்ணாய ஞானக்கண்ணைத் திறப்பதையே உ ப ந ய ன ம் என்பர். 'இத்தகைய உபநயனச் சடங்கினை இராம இலக்குவர்க்கு முடித்துவைத்து வேதங்களை யோதுவித்து வளர்த்த தந்தை

வசிட்டனே' என்பது பொருள். இங்ஙனம் கூறினமையால் சனகன் ஐயம் எவ்வாறு நீங்கும் எனின்? கூறுவேன்

ஒருவர்க்கு ஒழுக்கம் சிறப்பது பிறப்பாலும் உளதாகலாம்; சூழ்நிலையாகிய சிறப்பாலும் உளதாகலாம் "தந்தை யொப்பான் மகன்" என்பது உண்மையாக வேண்டுமாயின் அம்மகன், தன் தந்தையை நீங்காதிருந்து அத் தந்தையின் சூழ்நிலையில் வளர்ந்திருத்தல் வேண்டும் இங்ஙனம் வளரும் குழந்தைகள் தந்தையின் தன்மையைப் பெறுதல் இயல்பே இளம்பருவத்தில் தந்தையைப் பிரிந்து வேறொரு சூழ்நிலையில் வளர்ந்த குழந்தைகளிடம் தந்தையின் தன்மை படிதல் இயலாததே. இத்தகைய குழந்தைகட்குத் 'தந்தை யறிவு மகனறிவு' என்பது பொருந்தாது. வள்ளுவரும், "நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகு மாந்தர்க், கினத்தியல்ப தாகு மறிவு" என்று, சூழ்நிலையின் இயல்பால் மாந்தர்க்கு அறிவு வேறுபடும் என்பதை விளக்கியுள்ளார்.

இராம இலக்குவர்க்குத் தந்தை தயரதன் என்பது பெயரளவில்தான் என்றது, அவர்கள் வளர்ச்சி தயரதனுடைய சூழ்நிலையில் உருவாகவில்லை என்பதையே யுணர்த்திற்று. இராம இலக்குவர்கள் வசிட்ட முனிவருடைய வீட்டில்—அவர் சூழ்நிலையில் வளர்ந்தார்கள். வசிட்ட முனிவரே ஒழுக்கத்திற்கும் அறிவிற்கும் தந்தையாவார். எனவே பல மனைவியரையுடைய தயரதன் போல அவன் புதல்வனாகிய இராமபிரானும் பல மனைவியரை மணக்கும் பண்பினனாகான் அறிவுத் தந்தையாகிய வசிட்டர்போல ஒரு மனைவியையுடையனாவான் என்பது விளங்குமன்றோ? இராமபிரான் வசிட்டர்போல ஏகதார விரதமுடையனாவான் என்பதால் அவனுக்கு மனைவியாகப்போகும் சீதையும் வசிட்டர் மனைவியாகிய அருந்ததிபோலக் கற்பிற்கரசியாய் கற்புடை மாதரால் வணங்கத்தகும் கற்புத்தெய்வமாய் விளங்குதற்கு வாய்ப்புண்டு என்பதும் விளங்குமன்றோ?

இராமபிரான், பெற்ற தந்தையின் பெற்றியையடையாது வளர்த்த தந்தையாகிய வசிட்டரின் பண்பினையே மேற்கொள்வான் எனக் கௌசிகனார் குறிப்பால் பெறவைத்ததற்கேற்பவே, வில்லை வளைத்துச் சீதையை மணக்குங்கால் அவ்விராமபிரான்,

"இந்த இப்பிறவிக் கிருமாதரைச் சிந்தையாலுந் தொடேன்"

என்ற செவ்வரத்தைத் தந்ததாகச் சீதை அநுமானுக்குக் கூறிய வாற்றான் அறியலாம். அங்ஙனம் சீதைக்குக் கூறியதோடமையாது இராமபிரான் தன் வாழ்க்கையில் சீதையல்லாத பிற மாதரை மனத்தாலும் நினையாமல் வாழ்ந்தான் என்பதைக்

தம்பராமாயணத்தால் நன்கு தெளியலாம. சூர்ப்பனகை அழகிய உருவந்தாங்கி வந்து இராமபிரானிடம் தன் காதலைப் புலப்படுத்தவும், அதற்கவன இசையாது வெறுத்தமையால் அவ்விராமபிரானின் ஏகதார விரததைதயறியலாம் மேலும் சீதையை இராவணன எடுத்துச்சென்று பத்துத்திங்கள்காறும் அசோகவனததில் சிறை வைததிருநதபோதும இராமபிரான் அச்சீதையை நினைநது புலம்பினுன் அன்றி வேருெரு மாதினை மணக்க எண்ணுமையும, இராவணனைக் கொனறு சீதையை மீட்டு அயோததியில அரசாணடபொழுது வண்ணன் கூறிய இழிசொலலாற்ருது சீதையைக் கருபபததுடன் காட்டிற்கு அனுபபியபின்னும வேருெரு பெணணைத தனக்குரிய அரசியாக்கிக் கொளளாமையும காணக. அககாலத்து அரசன் ஒருவன பல மனைவியரை மணப்பது தவருகக் கொள்வதில்லை. அஙஙனமாகவும் மன்னர்க்கு மனனனுய் பெருஞ்செல்வத்தில் வாழ்நத இராமபிரான் சீதையைப பிரிந்து வருநதாது வேருெரு மங்கையை மணநது மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்தியிருக்கலாம் அஙஙனம செய்துகொள்ளாமைக்குக காரணமென்னை? குருகுல வாழ்க்கையால் பெறற ஒழுக்கமுறையன்றே காரணமாநின்றது. பல மனைவியரை மணநத தயரதன் மகனுயிருநதும் வசிட்டராகிய குருவின இலலததில பயின்ற பயிற்சியால் இராமபிரான் ஏகதாரவிரதனுகவே வாழ்நதான் எனருல் குருகுல வாழ்க்கையின் பெருமையை எனனென்று புகழ்வது?

நம் நாட்டில இத்தகைய குருகுலங்கள் இதுபோழ்து இருப்பின் நாடு சிறக்கும; ஒழுக்கம உயரும்

---

## தமிழ் மகவு தாலாட்டு

[புலவர், திரு. ராம. பெரிய கருப்பன்]

(முன் இதழ உஎஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெல்லம் இனிக்குமென்றும் வேம்பு கசக்குமென்றும்
சொல்லப் பழகவில்லை சுவைததுப் பழகிவிட்டாய!

தாய்ப்பால் அமுதுணவோ தகுமுணவைச் சுவைப்பதற்கோ
வாய்ப்பாகு ஊற்றெடுதது வடிய முகமபார்த்தாய்!

தாலாட்டித் தூஙகவைததுத் தளிர்முகத்தைப் பார்க்கையிலே
மேலான தாய்பதற மெல்லச சிரிததததுமேன்?

கண்வளராய என்றன் கருததை வளர்த்திடுவாய்,
பண்வளர்க்கும் பசுந்தமிழே, பாலவடிவே, தாலேலோ!

---

# திருக்குறள் அகவல்

[வித்துவான். திரு. மா. வேதாசலம், எம் ஏ., பி ஓ எல்]

(சிலம்பு - உஅ. பரல் - ரு, பககம் · உகூக தொடர்ச்சி)

## உ. வான் சிறப்பு

1. வானம் என்றும் வழங்கி நிற்ப
வையம் நன்கு வருதலான்
அமரர் அமிழ்தம் அன்ன தகைத்தே

2. உண்பார்க்(கு) உறுசுவை உணவுகள் உறுவித்(து)
உண்பதடூ உண்ணும் உயிரார்க்(கு)
உணவா உதவும உயர்புகழ் உறையே.

3. பெய்யுங் காலைப் பெயாது நிற்பின்
உய்யும் உயிரை உடற்றும
மாக்கடல் சூழ்நத மாநிலப் பசியே.

4. உழுதொழில் ஆற்றும் உழவர் தாமும்
உழுதல் செய்யா(து) ஒழிவர்
மாரி எனும்பயன் மன்னுக் காலே

5. கெடுததல் செய்வது கெட்டார்த் துணையாய்
எடுததல் செய்வ(து) எல்லாம
வல்ல(து) என்ப வான்வீழ மழையே

6. விசும்பு நீர்த்துளி வியன்நில மருங்கின்
அசும்பல் செய்யின் அல்லதை
பசும்புல் தலையும பார்த்தல் அரிதே

7. அளவில் கடலும் அதனியல் குறையும்
வளமழை தரூஉம் வான்புயல்
புனலை முகந்து பொழியா தெனினே.

8. விண்ணோர்க் காக வேற்றோர் எடுக்கும்
சிறபபும பூசையும் செல்லா
பெருநிலத்(து) எழிலி பெய்யாக் காலே

9. தானம் என்று தவம(து) என்று
ஆயவை இரண்டும் அசையா
வானம் உலகில் வழங்கா தெனினே.

10. எனைத்துணை மேம்பா(டு) ஏய்ந்தார் தமக்கும்
நீரின்(று) உலகியல் நிலவா(து)
ஆயின் வானின்(று) அமையா தொழுக்கே.

## ௩. நீத்தார் பெருமை

1. தமக்குரித் தாய தகைமைக் கண்ணே
பிறங்கி நீததாா பெருமைை
விழுமிய விரும்பும வியனூல் துணிவே.

2. நீததார் பெருமை நெஞ்சொடு படுத்து
வரையறை செய்யின் வையத்(து)
இறநதார் எல்லாம் எண்ணி அற்றே.

3. இருமை வகையினை இருளற நாடி
இமமைத் துறவறம் ஏற்றோர்
பெருமை ஒன்றே பிறஙகிற்(று) உலகே.

4. திண்மை என்னும் தீதுதீர் தோட்டியான்
ஐம்பொறி யானை அடக்குவான்
வரன்எனும் வைப்பின் வளம்பெறு வித்தே.

5. ஐம்புலன் செல்லும் அவாஅு அடக்கியோன்
வன்மைக்(கு) அகன்ற வானுறை
சான்றோர் இறைவன் சாலும் கரியே.

6. செய்தற்(கு) எளியன செய்யா ராகி
அரியவை ஆற்றுவார் ஆன்றோர்
அல்லார் அவற்றை ஆற்று தாரே.

7. ஒளியும் சுவையும் ஓசையும் ஊறும்
நாற்றமும ஆகிய நற்புலக்
கூற்றினை ஆய்வான் குறிப்பிற்(று) உலகே.

8. நிறைமொழி உடைய நீத்தார் பெருமை
மானிலம் வழங்கும் மறைமொழி
கண்கூ டாகக் காட்டி விடுமே.

9. நற்குணம் என்னும் நன்மலை ஏறி
விளங்கி நீத்தார் வெகுளி
கணமே யானும் காத்தல் அரிதே.

10. அந்தணர் என்போர் அறவோர் ஆவர்
எல்லா உயிர்கள இடத்தும்
மல்லல் தண்ணளி மணதத லானே.

## ௪. அறன் வலியுறுத்தல்

1. செய்தற் கரிய சிறப்பும் செல்வமும்
அடையத் தருமால்; அதனால்
அறத்தின் மிக்க ஆக்கம் எவனோ?

2. ஆன்றோர் புகழும் அறத்தின் மிக்க
ஆக்கம் இல்லை; அதனை
நீக்கி நிற்றலின் நெடுங்கே டின்றே.

3. தத்தமக் கியலும் தகையான் நின்றே
எத்திறத் தானும் என்றும்
ஒத்த நல்லறம் ஓவாச் செயலே.

4. மனத்துக் கண்ணே மாசிலன் ஆதல்
அனைத்தே அறமென்(று) அறைப;
ஆகுல நீர அஃதல பிறவே.

5. அவாசினம் கடுஞ்சொல் அழுக்கா றென்னும்
நான்கும் கடிந்து நன்கே
ஆற்றுதல் அஃதே அறமெனப் படுமே.

6. இளையம் ஆகலின் இறக்குங் காலத்(து)
ஆற்றுவம் அறமென் றாது
போற்றிச் செய்க பொன்றாத் துணையே.

7. அறத்தா(று) இஃதென்(று) ஆக மத்தான்
செப்பல் வேண்டா சிவிகை
பொறுத்தான் ஊர்ந்தான் பொருந்திய சான்றே.

8. அறம்செய் யாமல் அழியுநாள் இன்றி
என்றும் ஒருவன் இயற்றின்
அஃதால் வாழ்நாள் அடைக்கும் கல்லே.

9. இல்லறத் தானே இயன்று வரலே
இன்பம் ஆகுமற் றெல்லாம்
புறத்த வாகும் புகழும் இலவே.

10. செய்தற் பாலது செம்மை யாய
நல்வினை என்றே நவில்ப
அல்வினை என்ப(து) அழிதற் பாற்றே.

# யாரால் மழை பெய்கிறது ?

[மயிலை. திரு. சீனி. வேங்கடசாமி ]

மழையின் பெருமையையும் இன்றியமையாமையையும் உலகத்திலே எல்லா மக்களும அறிநதிருக்கிறார்கள். மழையின் சிறபபை ஏனையோர் அறிநததைவிட மிக நன்றாக அறிந்தவர் தமிழரே. ஏனென்றால், தமிழ் வேதம எழுதியருளிய திருவள்ளுவ நாயனா வான் சிறப்பு என்னும ஒரு அதிகாரம் வகுத்து அதில மழையின் சிறபபை எடுததோதினர் சிலப்பதிகாரம் எனனும் ஆதித் தமிழ்க காவியததை எழுதிய இளங்கோ அடிகள்,

> "மாமழை போற்றுதும மாமழை போற்றுதும்
> நாமநீர வேலி யுலகிற் கவனளிபோல்
> மேனின்று தான்சுரதத லான"

என்று மழையைப் போற்றினர். இவ்வாறு மழையைப் போற்றிச சிறப்பிததவர் தமிழரைத தவிர வேறு எமமொழியாளர் உளா? யாமறிநதவரையில் ஒருவரும் இலா.

பறவை விலங்கு மககள முதலிய எல்லா உயிர்களும் உலகத்திலே உயிர்வாழ வேண்டுமானல், புல் பூண்டு செடி கொடி மரம் ஆகிய தாவரங்கள் உலகத்தில் செழித்து வளர வேண்டும. ஓரறிவுயிராகிய மரம செடி புல் பூண்டுகள் இல்லையானல், ஈரறிவுயிா முதல் ஆறறிவுயிர் வரையில் எந்த உயிரும் உலகததிலே உயிர்வாழ முடியாது. உலகம் முழுவதிலும் உளள தாவரங்களாகிய மரம செடி கொடி புல் பூண்டுகளை ஒரேநாளில் முழுவதும் அழித்து விடுவோமானல், அப்பொழுதே உலகத்தில் வாழும ஏனைய உயிர்களள எல்லாம் மாய்ந்து உலகததில உயிாகளே இலலாமற் போகும் எனவே ஓறறிவுயிராகிய தாவரஙகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது ஏனைய உயிர்களின் வாழ்க்கை எல்லா உயிர்களுக்கும் ஆதரவாக உள்ள தாவரங்களை உண்டாக்கி அவற்றை நிலைபெறச் செய்வது மழை. இதனல் அன்றே,

> "விசும்பின் துளிவீழி னல்லால் மற் றாஙகே
> பசும்புல தலைகாண் பரிது." (திருக்குறள் : கசு)

என்றும்,

> "விண்ணின்று பொய்ப்பின விரிநீர் வியனுலகத்
> துண்ணின் றுடற்றும் பசி." (திருக்குறள் : கங)

என்றும் திருவள்ளுவர் கூறினர். அன்றியும், தாவரங்களை உண்டாக்கிஅவற்றின்மூலம் உயிாகளுக்கு உணவைக் கொடுப்பது

மட்டுமல்லாமல், உயிர்களுக்குத் தானே உணவாகவும் இருப்பது மழை (நீர்) இதனைத் திருவள்ளுவர்,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை." (திருக்குறள் ௧௨)

என்று அழகாகக் கூறினார்.

தொன்றுதொட்டு நமது நாட்டின் முக்கியத் தொழிலாக உள்ளது — முதுகெலும்பு போன்றது — உழவுத் தொழில். ஆகவே, நம்மவர் மழையின் இன்றியமையாமையை நன்கறிவர். ஆனால், மழை எப்படிப் பெய்கிறது என்பதைப் பண்டைப் பெரியோர் அறியார். நமது நாட்டிலமட்டுமல்ல, ஏனைய நாட்டிலும் பண்டைக்காலத்தில் இருந்தவர் மழை பெய்வதன் காரணத்தை அறிந்திலர். இந்திரன் என்னும் தெய்வம் மழையைப் பெய்யச் செய்கிறது என்றும், வருணன் என்னும் கடற்றெய்வம் மழையை அனுப்புகிறது என்றும் அவர்கள் கருதிவந்தனர். வெண்மேகங்கள் சென்று கடலில் படிந்து வயிறுநிறைய நீரைக் குடித்துக் கருமேகமாகி வானத்திலே வந்து மழையாகப் பெய்கிறது என்று காவியப் புலவர்கள் பாடிய பாட்டுக்களிலே, சூரியன் கதிரின் சூட்டினாலே நீர்நிலைகளில் உள்ள நீர் ஆவியாகச் சென்று ஆகாயத்திலே மேகமாகி மழையாகப் பெய்கிறது என்கிற 'சயன்ஸ்' என்னும் விஞ்ஞானத்தின் சாயல் காணப்பட்டாலும், அதை நம முன்னோர் காவியப் புலவரின் கற்பனை என்று கருதினார்களே யல்லாமல் உண்மை என்று கொள்ளவில்லை.

நமது நாட்டுப் பண்டைப் பெரியோர் மழை எப்படிப் பெய்கிறது என்று கருதினார்கள் என்பதைப் பார்ப்போம். அரசரும் மகளிரும் முனிவரும் மழை பெய்வதற்கும் பெய்யாமல் இருப்பதற்கும் காரணம் ஆவர் என்று அவர்கள் கருதினார்கள மகளிர் கற்புடன் இருந்தால் மழை பெய்யும்; கற்புத் தவறினால் மழை பெய்யாது என்றும், அரசர் செங்கோல் செலுத்தினால் மழை பெய்யும், கொடுங்கோல் செலுத்தினால் மழை பெய்யாது என்றும், துறவிகளாகிய முனிவர் பிழையின்றித் தவம் செய்தால் மழை பெய்யும்; பிழைபடத் தவம் செய்தால் மழை பெய்யாது என்றும் அவர்கள் கருதி வந்தார்கள்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தை அரசாண்ட இளங்கிள்ளி என்னும் அரசன் காலத்தில மழை பெய்யாமல் வற்கடம் உண்டாயிற்று. அப்போது மணிமேகலையார் அந் நகரத்திற்கு வந்தார். வந்தவரை அரசன் வரவேற்றான்.

வரவேற்று, மழை யில்லாமல் நாடு அல்லல் படுவதன் காரணத்தைக் கூறுகிறான் :

"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்கவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ
நலத்தகை நல்லாய்! நன்னா டெல்லாம்
அலத்தற் காலை யாகிய தறியேன" (மணி· 28 · 188 - 91)

அரசன் செங்கோல் செலுத்தினால் மழைபெய்யும், கொடுங்கோல் செலுத்தினால் மழை பெய்யாது என்பதைத் திருவள்ளுவரும் கூறுகிறார்.

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு." (திருக்குறள் ருசரு)

என்றும்,

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்"

என்றும் அவர் கூறியது காண்க.

கற்புடைய மங்கையரால் நாட்டில் மழை பெய்கிறது என்பதையும் திருவள்ளுவர் கூறுகிறார் :

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை." (திருக்குறள் ருரு௬)

"வறனோடின் வையகத்து வான்தரூஉங் கற்பினாள்"

என்பது கலித்தொகை.

"புண்ணிய முட்டாள், பொழிமழை தரூஉம்
அரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிர்"

என்பது மணிமேகலை.

"நாடு மூரும் நனிபுகழ்ந் தேத்தலும்
பீடுறும் மழை பெய்கெனப் பெய்தலும்
கூட லாற்றவர் நல்லது கூறுங்காற்
பாடு சான்மிகு பத்தினிக் காவதே"

என்பது வளையாபதிச் செய்யுள்.

கற்புடைய பெண்கள் இருக்கும் நாட்டில் மழை தவறாமல் பெய்து நாடு வளம்படும் என்றும் அரசனுடைய ஆட்சியும் செங்கோலாக நடைபெறும் என்றும் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தநாடு" (சிலப்பதி, 15 : 145 - 8)

இதுபோன்றே அரசனுடைய செங்கோலினுலேதான் மகளிர் கற்பு நிலைபெறுகிறது என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

"அருந்திறல் அரசா முறைசெயின் அல்லது
பெரும்பெயாப் பெண்டிர்க்குக் கற்புச்சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை"
(சிலப்பதி, 28. 207 - 9)

தவசிகள் தவம் செய்யாவிட்டால் மழை பெய்யாது என்று நான்மணிக்கடிகை என்னும் நூல் கூறுகிறது.

"மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை, மழையும்
தவமிலார் இல்வழி இல்லைத், தவமும்
அரசிலா இலவழி யில்லை, யரசனும்
இலவாழவான் இல்வழி இல்" (நான்மணிக கடிகை · ௪௮)

இவையன்றிப், பாப்பனர் அழல் ஓமபுதலினுலேயும மழை பெய்கிறது என்னும கருததும் பணடைக்காலததில் இருநதது. இதனை, "மழைவளந் தருஉம் அழலோம் பாளன்" எனனும் மணிமேகலையினுல் அறியலாம.

இவர்களாலேதான் பண்டைக் காலததில மாதம் மும்மாரி பெய்தது என்று பிற்காலத்து நூலாகிய விவேக சிநதாமணி கூறுகிறது

"வேதமோதிய வேதியர்க் கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக் கோர்மழை
காதல் மஙகையா கற்பினுக கோாமழை
மாதமூன்று மழையெனப் பெயயுமே."

என்பது அது மாதம மும்மாரி பெய்தது எந்தக் காலத்தில் என்பது தெரியவில்லை. ஆனல், வேதியரும மன்னரும் மங்கையரும் தத்தம அறநெறியில் இருந்து தவறியபடியால் ஆண்டில் மூன்று மழை பெய்தது என்று அந்நூலே கூறுகினறது.

"அரிசி விற்றிடும் அந்தணாக கோாமழை
வரிசை தப்பிய மனனருக் கோர்மழை
புருடனைக கொன்ற பூவையாக கோர்மழை
வருடம் மூன்று மழையெனப் பெய்யுமே"

என்பது அது: "என்ன ஐயா! இநத விஞ்ஞான காலத்தில், அணுக்குண்டு யுகத்தில் பழைய புராணங்களைப புரட்டுகிறீர்" என்று வாசகர் கருதுவர் என்று தோன்றுகிறது. இப்படியெல்லாம மழையைப்பற்றிப் பண்டைக் காலத்தவர் கருதிவநதனர் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும அல்லவா? அதற்காகத்தான் இதனை எழுதினேன்.

# சிற்றெறும்பும் சிள் வண்டும்[1]

[திரு கோபாலை. வே. பெருமாள்]

ஒண்மாண் நாட்டில் உதித்தஎம் தமிழீர் !
வீணாள் போக்கா விரும்பிய ராகுமின்
கொடுவெயி லெறிக்குங் கோடைக் காலம்
இடரறு உயிர்கள் இரையைத் தேடிக்
கூடுகள கட்டிக் குவித்து வைக்கக்
கடுங்குளிர் வீசுங் கார்கா லத்தைக்
கனவிலும நினையாச் சிள்வண் டொன்று
தனதுசேர்க் காது தினமுந் தின்று
மகிழ்ந்து பாடி மாய்த்தது கோடை
இமிழ்துளி வழியும் இருண்மழைக் காலம
வந்துபார் மக்களை வாட்டத் தொடங்க
சந்துகள் தோறும தண்ணீர் ஓடவும்
பந்துகள் தம்மனை பதுங்கி வாழவும
முந்திய நாளில் முனைந்து சேர்த்த
தம்பொருள் தின்றுயிர் தங்கி வாழ்ந்தன
இருப்பிடம் இரைகள் எதுவு மில்லாச்
சிறுவண்டு மழையால் சிறகை யிழந்து
இரையை வேண்டி யிரந்து திரியப்
பறக்க முடியாது பதறிக் கிடந்து
அண்மை யிருந்த அரும்புற் றொன்றைக்
கண்டது மகிழ்ந்து உண்ணளை நது புகவே
சிற்றெறும் புகள்தாம் சேமித்த உணவைப்
பற்றி யுண்டு பதுங்கி வாழ,
"அன்ப ! நண்ப ! ஆருயிர்த் தோழ !
இன்றே நீதான் இரைகொடா விடிலோ
இன்னற் பட்டு இறப்பேன் மழையால்
கொன்னே கழிந்தன கோடைக் காலம்
மன்ன ! அறிந்தேன் மாரியின் கொடுமை"
என்றே யிரந்து இழிந்து கேட்க,
"சோம்பித் திரிந்தாய் தேம்பித் திரிவாய்

---

1. "The ant and the cricket" எனும் ஆங்கிலச் செய்யுளின் மொழி பெயர்ப்பு.

எம்போல் நீமுன் இரையேன் சேர்த்திலை?
முன்வீண் கழித்த பின்னேன் கனையாய்?
என்னே முன்நீ பின்னை உன்னிலை
செல்க வெளியே சாவுக மழையால்”
என்றே துரத்தி இருந்தன எறும்பே
வெளியே வந்து வெதும்பிய வண்டும்
துளிமிகு மழையால் உயிர்துறந் ததுவே
எந்நாட் டதிலும் ஏற்ற முடைய
நன்றமிழ் நாட்டீர்! நாட்களை வீணில்
போக்கா வழியிரு பொருளசேர்ப் பீரே.

கதைச் சுருககம் ' ஒரு சிள வண்டு கோடை நாளில் குதித்து விளையாடி வீணே காலததைக் கழித்தது. மழைக் காலம் வந்தது. வண்டோ! குளிரால பலமற்றது; மழையால் சிறகிழந்தது; உணவின்றி மயஙகிக் கிடந்தது அருகிலோர் எறும்புப் புற்றைக் கண்டது, அதனுள்ளே புகுந்தது. அங்கு எறும்புகள் தாம் கோடைநாளிற் சேர்த்த பொருள்களை உண்டு நலமாயிருந்தன. இதைப் பாரத்த வண்டோ! “காலத்தின் அருமையைக் கவனியாதிருநதோமே” என்று ஏங்கியது. எறும்புகளை நோக்கி, “அன்பர்களே! யான் அறியாமையால் வீணே கோடையைக் கழித்தேன் இப்போது மழையால் வருந்துகின்றேன். காலததின் அருமையை இப்போது நன்றாய் உணர்ந்தேன்; புத்திவரப் பெற்றேன்; நீவிர் உதவாவிடில் உறுதியாய் இறப்பேன் கடனாகவாவது சிறிது உணவு கொடுங்கள்,” என்று இரந்து கேட்டது உடனே, அங்கிருந்த ஓர் எறுமபு, “நீ பின்காலத்தைக் கருதாது சோம்பித் திரிந்தாய்; ஆதலின் நீ சாவுக; வெளியே செலக” என்று சிள் வண்டைத் துரத்திற்று. வண்டோ! மழையின் கொடுமையால் உயிர் நீத்தது. இதனால் மக்களே! காலத்தி னருமையைக் கருதுங்கள். கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் சேமித்துக் குவியுங்கள். நன்னிலை எய்துங்கள். இறைவன் அருள் சுரப்பான்.

“பின்னை உன்னி முன்னே நடக்க”

# வள்ளுவர் காலம்

[திரு. கு. பரமசிவம்]

(சிலம்பு: ௨௮, பரல்: ௬, ௨௮௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி, "இம் மனுஸ்மிருதியில் அங்கங்கே காணப்படும் உவமைகளும் திருக்குறளில் காணப்படுகின்றன. உதாரணமாக,

உவர்நிலத்தில் இட்ட வித்தானது பயன்படாதவாறுபோல என மனுவில் (III, 142) வரும் உவமை

"உளரென்னும் மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்" (406)

என வந்துள்ளது" என்று இத்தமிழன்பர் எழுதியுள்ளார்.[1] மனுகூறும் உதாரணத்தை நன்கு புரிந்துகொள்ள அஃது எடுத்தாளப்படும் இடத்தையும் நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டற்பாலதாகும். சிராத்தம் பற்றிய பகுதியில் ஒரு சூத்திரத்தில் மனு இவ்வுதாரணத்தை எடுத்தாண்டுள்ளார். "உவர்நிலத்தில் விதைத்தவன் அறுவடையாகிய பயனைப் பெறமாட்டான். அவ்வாறே வேதமறியாத ஒருவனுக்குக் கொடுத்தாலும் கொடுப்பவன் பயன்பெறுதல் இல்லை" என்பதே அச் சூத்திரம்.[2] அஃதாவது சிராத்தம் கொடுக்கும்பொழுது வேதமறிந்தவனைக் கொண்டே கொடுத்தல்வேண்டும்; அறியாதவன் வழியாகக் கொடுத்தால், கொடுத்தலாகிய தொழிலைச் செய்தாலும், கொடுப்பவன் அதற்குரிய பயனைப் பெறமாட்டான் என்பதே இதன் கருத்தாகும்.[3] இதற்கு உதாரணமாக உவர்நிலத்தில் விதைத்தவன் பயன்பெறுதல் இல்லை என்பதைக் கூறியுள்ளார். உவர்நிலத்தில் விதைத்தவன் விதைகளைச் செலவிடுகிறான்;

---

1. "தமிழ்ச்சுடர்மணிகள்" Second Edition, pp. 74.

2. 'Manu Smriti'—Translated by Ganganatha Jha, M A. D Litt. Vol II Part 1, Verse 142· "Just as having sown the seed in the barren soil, the sower reaps no harvest—even so having given the offering to one ignorant of the Veda, the giver obtains no reward."

3. Ibid. Verse 142—Bhasya: "'Barren soil'—unproductive ground. That plot of land is called 'barren' on which if seed is sown, it does not sprout; there the 'sower reaps no harvest.'

"Even so 'to the person ignorant of the Veda'—'having given the offerings'—made to Gods and ancestors—'the giver obtains no reward.'"

ஆயின் பயன்பெறுதல் இல்லை என்பதே மனு கையாண்ட உதாரணமாகும்; தமிழன்பர் மொழிபெயர்த்தவாறு "உவர் நிலத்தில் இட்ட வித்தானது பயன்படாதவாறுபோல" என்பதன்று. இனிக் குறட்கருத்தைப் பரிமேலழகர் வழியாகவே நோக்குவோம்: "கல்லாதவர், காணப்படுதலான இலரல்லர் உளரென்று சிலர் சொல்லுமளவினராதலன்றித் தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால் விளையாத களர் நிலத்தோடொப்பர் களர் தானும் பேணற்பாடழிந்து உயிர்கட்கும் உணவு முதலிய உதவாததுபோலத் தாமும் நன்கு மதிக்கற் பாடழிந்து பிறர்க்கும் அறிவு முதலிய உதவாரென்பதாம்."[1] இங்கு வள்ளுவர் உவமித்த பொருள் களர்நிலம். மனுவால் உதாரணமாகக் கூறப்பெற்றது வித்தினும் பயன்பெறுதான் நிலை இவ்வாறு பொருளால் வேறுபடும் இவை ஒன்றா? அன்றியும் முறையாலேனும் ஒன்றா? வள்ளுவர் ஆண்டது உவமை. மனு கொண்டது உதாரணம் இரண்டும் ஒன்றா?[2]

மேற்கூறிய இரண்டும் பொருட்பாலில் வருவன மனுவுக்கும் அறத்துப்பாலுக்குமிடையே ஒற்றுமையுடையதாகத் தமிழன்பர் சுட்டிய பகுதி ஒன்றேயொன்றாகும். அதனை நோக்குவோம் "மனுஸ்மிருதியில் இல்லறத்தில் நிற்பவன் ஏனை மூன்று நிலைகளிலும் உள்ளவர்களுக்கு உணவு ஈந்தும் வேதஞானம் உதவியும் அவர்களை ஓம்புதலால், அவனே நால்வகை நிலையினருள்ளும் தலைமை பெறுகின்றான்" (மனு III, 78) என்று வரும் கருத்து திருக்குறளில்,

> "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றில் நின்ற துணை" (41)

எனவும்,

> "இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
> முயல்வாருள் எல்லாம் தலை" (47)

எனவும் வருவனவற்றில் அமைந்துள்ளமை காணலாம்"[3] என்று இவர் எழுதியுள்ளார். இரண்டுக்கும் ஒற்றுமை இருக்கிறதா என்றறிய மனுவின் கருத்தை நன்கு விளங்கிக்கொள்வது இன்றி

1. குறள், 406. பரிமேலழகர் உரை.

2. உவமை வேறு; உதாரணம் வேறு. "திருவள்ளுவர் நூல் நயம்"—ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L.,—pp. 143-4. (ஒருண்மையை மற்றோருண்மையால் விளக்குவது உதாரணம். "அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை ..")

3 "தமிழ்ச்சுடர்மணிகள்" Second Edition, p.

மையாதது. பிரமசரியம், கிரகத்தம், வானப்பிரத்தம, சன்யாசம என்னும் நான்கு நிலையினுள்ளாரினும இல்லறத்தை மேற்கொண்டவனே ஏனை மூவருக்கும வேதம ஓதுதற்கும், அவர்கட்கு உணவு ஈதற்கும் வாய்ப்புடையவனாகலின் அவனே இந்நாலவரினும தலையானவன என்பதே மனுவின் கருத்து. ஏனை மூன்று நிலையினுள்ளாராகரு இவ்விரண்டனுள் (வேதம் ஓதல், உண்வு ஈதல்) ஒன்றே இரண்டுமோ இயலாதன என்பதும் இல்லறத்தானே இவ்விரண்டையும் இயற்றுதற்குரியவன் என்பதும உரை வகுத்த மேதாவியால் நன்கு விளக்கப்பட்டுள்ளன[1] இவற்றால நால்வகை நிலையினர் உளர் என்பதும் அவர்களுள் இல்லறத்தானே தலையானவன் என்பதும மனுவின் கருத்தெனபது போதரும். வள்ளுவர் இவ் வருணாசிரம முறையினை எங்கேனும கூறியிருக்கின்றனரா? பரிமேலழகர் தாம,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும
நல்லாற்றின் நின்ற துணை" (41)

என்னும் குறளின் உரையில் ஏனை மூவராவர் பிரமசரிய ஒழுக்கத்தானும், தவஞ்செய்யும ஒழுக்கத்தானும், முற்றுந்துறந்த யோகவொழுக்கத்தானும என, இவர் என்றெழுதிச் செல்கிறார். "வள்ளுவர் கருதாதனவற்றையும் நுழைக்கிறோமே! பிரமசரிய ஒழுக்கத்தானையும் தவவொழுக்கத்தானையும பற்றி வள்ளுவர் கூறினரல்லரேயென்னும ஐயம் பரிமேலழகருக்கே தோன்றுகிறது. எனவே, "இவருள முன்னையிருவரையும பிற மதம் மேற்கொண்டு கூறினர்" என்று எழுதி மழுப்புகிறார். இதனால் நால்வகை நிலைபற்றிய கருத்து பரிமேலழகருடையதேயன்றி வள்ளுவரதன்று என்பது விளங்கும இனி,

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (47)

என்னும் குறளுரையில் 'முயல்வாருள் எல்லாம் தலை' என்னும் தொடருக்குப் 'புலன்களைவிட முயல்வார் எல்லாருள்ளும் மிக்கவன்' என்று உரைகூறி, 'முற்றத் துறந்தவர் விட்டமையின் முயல்வார் என்றது மூன்றும் நிலையில் நின்றாரை, அந்நிலைதான் பலவகைப்படுதலின் எல்லாருள்ளும் எனவும், முயலாது வைத்துப் பயன் எய்துதலின் தலையெனவும் கூறினார்' என்று விளக்கம் எழுதுகிறார். இதனால் வானப்பிரத்த நிலையினுள்ளார் எல்லாரினும் இல்லறத்தான் தலையானவன் என்று பரிமேலழகர் கருதுகிறார் என்பது விளங்கும். இவற்றால் வள்ளுவர் நால்வகை நிலையினைக்கூறினாரல்லர் என்பதும, பரிமேலழகரேகூறினர் என்பதும்,

1 "Manu smriti"—Ganganatha Jha—Vol II Part I - Verse 78.

பரிமேலழகரும் வானப்பிரத்த நிலையிலுள்ளாரினும் இல்லறத்தான் மிக்கவன் என்றே கூறினர் எனபதும் தேற்றம. மனுவின் கொள்கையும், வள்ளுவா கருத்தாகப பரிமேலழகர் கூறியதும ஒன்ரு? ஒனறென்றே விவாதத்திற்காகக் கொணடாலும் ஒற்றுமை பரிமேலழகருக்கும் மனுவுககுமிடையே காணபபடுகிறதேயன்றி வளளுவருககும மனுவுக்கும் இடையேயனறு. பரிமேலழகர்தாம் இஙகு வருணாச்சிரம முறையைப் புகுத்தியெழுதியவா. பரிமேலழகருககு இநதப பண்பு உண்டென்பதனை இததமிழனபரே ஒததுககொணடுளளாா: “அவா தமது கல்வியிலும, தமது அறிவாறறலிலும, தம் கொள்கைகளிலும் பெருநமபிககை யுடையவா. வளளுவர் கருத்துககளைத தம கருததுககளாலனறி உரிய பிற கருவிகளகொண்டு ஆராய்ந்து துணியவேணடும எனனும நெறியில செலலாதவா சரித்திர உணாச்சியும சூழநிலை உணாசசியும அவரால் பெருமபாலும போறறபபடவில்லை. வளளுவா கருததுக்களையே எலலாவிடங்களிலும அவா விளக்குகிருா என்று நாம கொளவதறகிலலை.”[1] இது பரிமேலழகரைப பறறிய இததமிழன்பரின் எணணம. எனவே, பரிமேலழா கூறறை வளளுவா கூற்ருகக் கொண்டு வள்ளுவரை மனுவுககுக கடனாளியாககுவது அடாதசெயல.

இனி, திருவளளுவ மாலையில் ஒரு செய்யுளில்,

“ . . . மனு, பணடைமறை
நோவனமற் றில்லை நிகா”

என்று கூறியது, இங்குக காடடியவை போன்ற கருத்தொற்றுமைகளை நோக்கியேயாகும” எனறு இவர் எழுதியுள்ளார்[2] உள்ளபடியே பாாததால இவா இததிருவள்ளுவமாலைச செய்யுளை மேற்கோளாகக காட்டியதே தவறு. ஏனெனில் இஃது இவரது கட்சிக்கு எதிரான சான்ருகும்

“எப்பொருளும் யாரும் இயல்பின அறிவுறச
செப்பிய வள்ளுவாதாம் செப்பவரும்—முப்பாற்குப்
பாரதமசீ ராம கதைமனுப் பணடைமறை
நோவனமற் றில்லை நிகர்”

என்னும் இச்செய்யுள திருக்குறளுக்கு நிகராகக்கூறும தனமை மனுநீதிக்கு மட்டுமேயன்றி அதன ‘தாத்தா’வான வேததது்க்கு

---

1. “தமிழச்சுடாமணிகள்”—First Edition—pp 98. இப்பகுதி என்ன காரணம் பற்றி இரண்டாம் பதிப்பில் நீக்கப்பட்டதென்று தெரியவில்லை.

2. “தமிழ்ச்சுடாமணிகள்”—Second Edition—pp. 74.

மில்லையென்றே கூறுகிறது.[1] தமிழன்பர் தம் கட்சிக்கு வழக்காடுதலை மறந்து இங்கு எதிர்க்கட்சிக்காக வழக்காடியுள்ளார். மேற்கண்ட நூற்கள்—சிறப்பாக மனுநீதி—குறளுக்கு நிகராகாமைக்குக் காரணத்தை அச்செய்யுளின் ஆசிரியராகக் கருதப்படும் பாரதம் பாடிய பெருந்தேவனார் கூறினாரல்லரேனும் பிறர் கூறியுள்ளனர். மனுவாதி நூல்கள் வருணாசிரம முறையினைக் கூறுவன என்பதும், ஒரு குலத்துக்கொரு நீதி கூறுவன என்பதும் அறிஞர் கண்ட முடிபாகும். சான்றாக ஒன்றுமட்டும் காண்போம். ஐந்தாண்டுப் பருவத்தானாயினும் பார்ப்பனச் சிறுவன் எழுபதாண்டுப் பார்ப்பனரல்லாதானை லகரமிட்டோ டகரமிட்டோ அழைத்துப் பேசிவருதலை இன்றும் காணகிறோம். இம்முதியோனும் அச்சிறுவனை 'சுவாமி' என்று அழைத்துப் பணிதலையும் காண்கிறோம். இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்று மனு கூறியுள்ளார்.[2] இதுபோன்று பல பகுதிகளைச் சுட்டிக்காட்டமுடியும். இவற்றையெல்லாம் நோக்கியே பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக் கொருநீதி"

என்று பாடிச் சென்றார்கள்.

இதுகாறும் குறளும் மநுநீதியும் அடிப்படையிலேயே முரணானவையென்றும், இவற்றுள் ஒற்றுமையுடையனவாக இத்தமிழன்பர் காட்டுவன உண்மையில் வேற்றுமையையோ முரண்பாட்டையோதான் உணர்த்துகின்றன என்றும் கண்டோம்.

(தொடரும்)

---

1. இதுவே பொருளாதல். "திருக்குறள்" கழகப் பதிப்பு (1939) p. 539 - 540.

2. "Manu Smriti"—Ganganatha Jha—(Vol I, Part II) Verse 135 "The Brahmana of ten years and the Kshatriya of a hundred years should be known as father and son, and of the two the Brahmana is the father" ('Even when the Kshatriya is very old and one Brahmana very young in years, the former should rise to meet and salute the latter')

# செய்திகளும் குறிப்புக்களும்

### முந்திரிக்கொட்டை

ஏறக்குறைய 400 ஆண்டுகட்கு முன்னர் பிரேஸிலிலிருந்து நம் நாட்டிற்கு முந்திரிக்கொட்டை கொண்டுவரப்பட்டது. தற்போது நம் நாட்டில் ஆண்டுதோறும் 7 கோடி ரூபாய் மதிப்பிடத்தக்க 60,000 டன் முந்திரிக்கொட்டை விளைகிறது. உலகிலேயே பெரும்பான்மையாக முந்திரி விளையுமிடம் நம் இந்தியாவாகும். முந்திரிப்பருப்பு உடல் வளர்ச்சிக்கேற்ற நல் உணவுப் பொருளாகும். இதில் நூற்றில் 21.2 பங்கு புரதமும் 46.9 பங்கு கொழுப்பும் 5.0 பங்கு இரும்புச் சத்தும், உயிரூட்டியும் உள்ளது. முந்திரிப்பழச்சாறு வாந்தியைத் தடுப்பதற்கேற்ற மருந்தாகப் பயன்படுத்துகின்றார்கள். முந்திரிக்கொட்டையினின்று எடுக்கும் எண்ணெய் படகுகளுக்கு வண்ணந்தீட்டவும், மீன் பிடிக்கும் வலைகளின்மேல் தடவவும், பூச்சு எண்ணெய்கள் செய்யவும் மிகவும் பயனுடைத்தாகின்றது. இந்தியாவில் பம்பாய் மாகாணத்தைச் சார்ந்த இரத்தினகிரி, வடகன்னடம் முதலிய மாவட்டங்களிலும், சென்னை மாகாணத்தில் திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, தென் ஆற்காடு, கோதாவரி, விசாகபட்டினம் முதலிய மாவட்டங்களிலும், திருவாங்கூர், கொச்சி ஆகிய இடங்களிலும் மிகுதியாக விளைகிறது. இந்தியாவில் விளையும் முந்திரியில் சென்னை மாகாணத்தில் மாத்திரம் சரிபாதி விளைகிறது.

### தேயிலை

இந்தியாவில் நடைபெறும் பெருந் தொழில்களில் தேயிலைத் தொழிலும் ஒன்று. இது வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்வதின் வாயிலாக ஆண்டுதோறும் 100 கோடி ரூபாய் இந்தியாவிற்கு வருவாய் கிடைக்கிறது. தேயிலை பெரும்பான்மையாகச் சென்னை மாகாணம், திருவாங்கூர், கொச்சி, மைசூர், குடகு முதலிய இடங்களில் ஏறக்குறைய 170,000 ஏகரா நிலங்களில் பயிரிடப்படுகிறது. 1846-ல் தென்னிந்தியாவில் முதன் முதலாக வணிகநோக்கத்துடன் தேயிலை பயிரிடப்பட்டது. கடந்த 100 ஆண்டுகளில் தேயிலைத் தொழில் பெரும்பான்மையாக வளர்ந்திருந்தாலும், முதல் உலகப் போருக்குப் பின்னரே மிக வருவாய் தரக்கூடிய அளவிற்கு இத்தொழில் வளர்ச்சியடைந்தது

### காப்பிக்கொட்டை

அராபியாவிலிருந்து இந்தியாவிற்கு வந்த **பாபா புதீன்** என்னும் வழிப்போக்கர் ஒருவரால் 17-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் காப்பிக்கொட்டை இந்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. ஏழு வகையான காப்பிக்கொட்டைகளை இவர் கொண்டுவந்து மைசூர் மாநிலத்தைச் சார்ந்த ஒரு மலைச்சரிவில் முதன்முதல் பயிர்செய்தார். உலகில் மிகுதியாகக் காப்பிக்கொட்டை விளையுமிடம் தென்னமெரிக்காவிலுள்ள **பிரேஸில்** ஆகும். எனினும், இந்தியாவிலுள்ள கண்ணனூரிலிருந்து 1695-ல் ஜாவாவிற்கும், 1760-ல் ஜாவாவிலிருந்து பிரேசுக்கும் காப்பிக்கொட்டை எடுத்துச்செல்லப்பட்டது என்பதற்குத் திட்டவட்டமான சான்றுகள் உள்ளன. தற்போது நம் நாட்டில் திருவாங்கூர், கொச்சி, மைசூர், குடகு முதலிய இடங்களில் 2,30,000 ஏகர் நிலங்களில் காப்பி

பயிராகிறது. ஆகவே, பிரேஸில் காப்பிககொட்டை இந்தியாவினின்று கொண்டு செல்லப்பட்டே பயிரிடப்பட்டது என்று தெரிகிறது.

**பேராசிரியர், திரு. பூவராகம்பிள்ளை நினைவு நாள்**

அண்ணுமலைப் பல்கலைககழக மண்டபததில் டாக்டர் அ. சிதம்பரநாதச செட்டியார் தலைமையில் 6-3-54-ல் ஓா கூட்டம் தொடஙகியது. அதில அறிஞா பேராசிரியா காலஞ்சென்ற திரு. ஆ. பூவாராகம் பிள்ளையவாகள் தமிழததொண்டுகள் குறிததுப் பல அறிஞாகளால் பாராட்டிப் பேசப்பெற்றன அவா திருவுருவப் படமும் திறநது வைக்கப்பட்டது.

**நாவலர் சோமசுந்தர பாரதியார்க்குப் பட்டம்.**

மதுரை திருககுறட் கழகத்தில் கடநத சனவரித திங்களில் பாரதியவாகள் தமிழுக்குசசெய்த தொண்டு குறிததுப் பாராட்டுக் கூட்டம் நிகழநதது. அதில பாரதியின அருமபெரும் தமிழ்ததொண்டு குறித்துப் பலா பேசினா. திரு. கருமுததது. தியாகராசச செட்டியார் பாரதிககுப் பொன்னுடைபோர்ததிப் பாரதியின் சிறப்புக குறித்துப் பாராட்டிப் பேசினா. ஷை கழகததார் பாரதிககுக '**கணக்காயர்**' என்னும் பட்டததைச சூட்டி வழங்கி மகிழநதனர்.

**குறிப்பு** தமிழ்ப் புலவர்களின் நினைவுநாட் கொண்டாடலும் புலவாகட்குப் பட்டம் முதலியன வழங்கிச சிறப்பிததலும மொழிககும, நாட்டுக்கும ஆறறும் பெருநதொணடாகும என, மகிழ்கின்றேம் —**ஆ-ர்.**

---

# மதிப்புரை

(க) தமிழ்க்கலை : பக்கம் - சஅ. விலை அணு. 8

[**ஆசிரியர் :** திரு. வி. க. **வெளியிட்டோர் :** இலக்கிய மனறம் 104, டெமல்லஸ்ரோடு, சென்னை - 12.]

இநநூல் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் பல அறிவியல் நிலையஙகளில் நிகழத்திய சொற்பொழிவுகள். திரு. வி. க. அவர்கள் பேசசென்றால், எழுதஙெதன்றால் அதற்கு ஓா நனமதிப்பும் வேண்டுங் கொல்? பொன்னேபோற் போற்றத்தகுந்த இநநூலில் '**தமிழ்க்கலை**' என்பது முதல் '**வ. உ. சிதம்பரனுர்**' என்பது இறுதியாக ஆறு சொற்பொழிவுகள் அடஙகியுள்ளன.

தமிழே திரு. வி. க, திரு. வி. க. அவர்களே தமிழெனின் மிகையாகாது அவர்கள் உள்ளககிடக்கைகள் இந்நூலில் பொங்கித் ததும்பிப் பொலிவுறுகின்றன. அவர்கள் ஏனைய நூல்களோடு ஒப்ப வைததுத் தமிழமக்கள் யாவரும் பயிலற்கேற்ற சீரிய கூரிய நூல். சொல்லின் செல்வர் திரு. க. அன்பழகனுர் முன்னுரையுடன் திகழ்கின்றது. இதனை நாட்டுக்குத் தொகுத்துதவிய இலக்கியமன்றத்தார் அரிய முயற்சியைப் பாராட்டுகின்றேம்.

(௨) பொய்யாமொழிப் பூஞ்சோலை : பக்கம் - ௧௯௨. விலை ரூ. 2

[**ஆசிரியரும் பதிப்பாளரும் :** *திரு. A. முத்துச்சாமிப்பிள்ளை பி. ஏ. ஓய்வுபெற்ற ஆவணப்பதிவாளர், ஆனையப்பபிள்ளை சந்து, கீழரதவீதி, பெரியகுளம், மதுரைமாவட்டம்.*]

*பொய்யாமொழிப் பூஞ்சோலை என்னும் இந்நூல்* **முல்லைக்குத் தேர்** *என்பது முதல்* **அருளாட்சி** *என்பது இறுதியாக முப்பது கட்டுரைத் தொகுதிகள் அடங்கிய நன்னூல் ஆகும். பொய்யாமொழி பொய்படாத மொழி. அஃதாவது உண்மையான மொழியினையுடைய நூல் என ஆகிச் சிறப்பால் திருக்குறட் பெருநூலை உணர்த்திற்று. ஆசிரியர் இக் கட்டுரையைத் தம் ஆழ்ந்து அகன்ற நுண்ணிய அறிவுத்திறனால் ஆய்ந்து ஆய்ந்து எழுதி, அவைகளின் முடிபைத் திருக்குறளோடு இணைத்துப் புதுவழிகோலி விருந்தின் முறையில் அமைத்துதவிய சிறப்பு மகிழ்வுக்குரித்து. இது பூஞ்சோலையாகவே மணங் கமழ்கின்றது.*

*ஆசிரியர் ஆங்கிலமொழியறிவுச் செல்வத்தோடு தமிழ்மொழி ஆய்புலச் செல்வமும் ஒருங்கேபெற்ற பேரறிவுச் செல்வராதலின் முல்லைக்குத் தேர் என்பதில் 'பூத்தலை அறாஅப்புனைகொடி முல்லை, நாத்தழும்பிருப்பப் பாடாதாயினும், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த,' பிறர் புன்கண் அஞ்சும் மென்கட் செல்வம்பெற்ற பாரி வரலாறு கட்டுரைத்து, அதனை விளக்குமுகத்தான் மேல்நாட்டுக் கவிஞர் மில்டன் அரியவுரையையும் வள்ளுவப்பெருமான் 'அன்பிற்கு முண்டோ' என்று துவங்கும் அரிய குறள் மணியையும் அமைத்துக் காட்டியிருப்பது, பழமை கண்டு களித்தற்கு ஏற்றதாக அமைந்துளது.* **போலீஸ் சேவகன், வைசிராய் மாளிகை, வின்ஸ்டன் சர்ச்சில்** *போன்ற கட்டுரைகள், புதுமையிற் பழமைகண்டு இன்புறத் துணைபுரிதலோடு, அவை தற்கால வரலாற்றுண்மைகளை அறிந்துகோடற்கும் வழிகாட்டியாகவுள்ளன. இதன்கண், தற்காலப் பெரியாராக இலங்கி காந்தியடிகள் மேகத்திடையே மின்னலெனப்போதருவது பெரு மகிழ்வுக்குரியதாக அமைந்துள்ளது.*

*பிறபிற கட்டுரைகள் யாவையும் தனித்தனி எடுத்து விளக்குவதாயின் இவ்வேடு போதா. ஆகவே, ஒரு பானைச் சோற்றுக்குப் பதம் ஒன்றே காண்பதுபோல எடுத்துக்காட்டுக்காக ஈங்கே இரண்டொன்று காட்டப்பெற்றன.*

*ஆசிரியரவர்கள் அளவுகடந்த தனித்தமிழ்க் கனிவையும், முயற்சியையும் பாராட்டுகின்றோம். ஆங்கிலங்கற்றோர் அம்மொழிக்கே அடிமையாகாது இவர்கள் போன்று தம தாய்மொழித் துறையில் மனம் ஊன்றுவராயின், அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வென்று மேலோங்குமெனக் கூற விழைகின்றோம். ஆசிரியர் இத்தகைய துறையில் இன்னும் மொழித்தொண்டு செய்யவேண்டுகின்றோம்.*

---

*திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர் : வ. சுப்பையா.*